சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 21.11.2023 supeedsam.com supeedsam@gmail.com

# வரவு- செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணம் புறக்கணிப்பு

## சாணக்கியன் கவலை



2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 6ஆம் நாள் விவாதத்தில்

02 ஆம் பக்கத்தில்...

## வடக்கு, கிழக்கில் அபிவிருத்தியில் புரட்சிசெய்த மஹிந்தவுக்கு எதிராக குற்றம் சுமத்துவது தேசிய குற்றம்

30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவந்து, வடக்கு, கிழக்கில் அபிவிருத்தியில் புரட்சிசெய்த மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைப்பது தேசிய குற்றமாகும் - என்று இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

முன்னாள் ஜனாதிபதி (கோட்டாபய ராஜபக்ச), முன்னாள் பிரதமர் (மஹிந்த ராஜபக்ச)

02 ஆம் பக்கத்தில்...



## ராஜபக்ஷர்களின் சோத்துகளை பறிமுதல் செய்ய வேண்டும்

### சந்திரிகா முன்வைக்கும் யோசனை



நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றமைக்காக நீதிமன்றினால் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ள நபர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததற்கு முன்னாள்

02 ஆம் பக்கத்தில்...

## போலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மாவீரர் நினைவேந்தல் மனு நிராகரிப்பு



மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு தடைகோரி தெல்லிப்பளை மற்றும் அச்சுவேலி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் மல்லாகம் நீதவான் நீதிமன்றால் நேற்று நிராகரிக்கப்பட்டது.

நாட்டில் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் நினைவேந்தல் எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி தெல்லிப்பளை மற்றும் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுஸ்டிப்பதை தடை

02 ஆம் பக்கத்தில்...

## கொக்குதொடுவாய் மனித புதைகுழியில் தொடரும் அகழ்வு பணி

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வு பணியானது மீள ஆரம்பிக்கப்பட்டு இன்றையதினம் இரண்டாவது நாளாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

பாதுகாப்புக்காக மூடப்பட்டிருந்த பொலித்தீன் உறைகள்,

02 ஆம் பக்கத்தில்...



## நாட்டை மீண்டும் பாதாளத்திற்குள் தள்ளக்கூடாது

எதிர்ப்புக்களை வெளியிட்டு நாட்டை மீண்டும் பாதாளத்திற்குள் தள்ள முற்படக்கூடாது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

இன்று நாடாளுமன்றில் கதைக்கும் பலர், அவர்களது ஆட்சிக் காலத்தில் எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதை மக்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

02 ஆம் பக்கத்தில்...

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma :34598
25605: cicero



MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# 75 வயதிலும் வெறும் காலுடன் ஓடி சர்வதேச சாதனை படைத்த முல்லைத்தீவு அகலத்திருநாயகி





(அஸ்ஹர் இப்றாஹிம்)

அண்மையில் பிலிப்பைன்ஸ் இல் நடைபெற்ற தேசிய மாஸ்டர்ஸ் மற்றும் சிரேஸ்ட பிரஜைகள் விளையாட்டுப் (மீச்ஞடிணிணச்டூ ஙுச்ஞுனுணூண் குனுணடிணிணூண் அஞுடடூனுஞுடி ஞிண்) போட்டியில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட முள்ளியவளை, முல்லைத்தீவை சேர்ந்த திருமதி அகிலத்திருநாயகி (ஓய்வு பெற்ற சிறைச்சாலைகள் உத்தியோகத்தர்) இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

1500 மீற்றர் நெடுந்தூர ஓட்டம் ,

5000 மீற்றர் நெடுந்தூர விரைவு நடை ஆகிய போட்டிகளில் முதலிடம்பெற்று தங்கப் பதக்கங்களையும்,

800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெங்கலப் பதக்கத்தையும்,

5000 மீற்றர் நெடுந்தூர ஓட்டத்தில் நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

# நானுஓயா நாவலர் கல்லூரி சிறந்த பெறுபேறு



(தலவாக்கலை பி.கேதீஸ்)

2023 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டம் ஒன்றின் பாடசாலையான நாவலர் ஆரம்பக் கல்லூரியின் ஒன்பது மாணவர்கள் வெட்டு புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் கே.டிப்திஷா (170 புள்ளிகள் ),எல். நிசேல்யில் சுவேதா (158 புள்ளிகள்), பி.தக்ஷாயினி (155 புள்ளிகள்). எஸ். தனுஷன் (152 புள்ளிகள் ),எம்.வாசினி (151 புள்ளிகள்), கே.பிரணிதா (150 புள்ளிகள்), ஜெனிபர் (147 புள்ளிகள்) என்.யதுமிஷான் (146 புள்ளிகள் ) பி .கிருஷ்ணாதரன் (145 புள்ளிகள்) ஆகியோருடன் கற்பித்த ஆசிரியர்களான எம்.பிரசாந்த் மற்றும் எஸ். சிவகுமார் ஆகியோருக்கும் பாடசாலையில் கடமையாற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் பாடசாலை அதிபர் க.சதாசிவம் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

# மனித நுகர்விற்கு பொருத்தமில்லாத பழங்கள் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குட்பட்ட மாவடிப்பள்ளியில் கைப்பற்றப்பட்டது





(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாவடிப்பள்ளி பிரதான வீதியில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பழங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர்.!

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி பிரதான வீதியில் விற்பனைக்கு வைத்திருந்த மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பழங்களை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர்.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷிரின் வ அறிவுறுத்தலுக்கு அமைய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது மனித நுகர்க்கு பொருத்தமற்ற அழுகிய இந்த பழங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்த பழங்களை விற்பனைக்காக காட்சிப்படுத்திய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதுடன் இனிமேல் பொதுமக்கள் வீதியில் விற்பனை செய்யப்படுகின்றன தரமற்ற பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பில் அவதானமாக செயல்படுமாறும் கேட்டுள்ளனர்.

# நானுஓயாவில் வீடுகளில் புகுந்த வெள்ள நீர் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு





(டி.சந்ரு செ.திவாகரன்)

மலையகத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழைக்காரணமாக பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 476/ஏ கிரிமிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவில் டெஸ்போட் , கிரிமிட்டி, கார்லிபேக் போன்ற பிரிவுகளில் திங்கட்கிழமை (20) பிற்பகல் பெய்த கடும் மழையால் நான்காவது முறையாகவும் நானுஓயா டெஸ்போட் பகுதியில் இருந்து செல்லும் கிளையாறுகள் பெருக்கெடுத்ததன் காரணமாக 4 வீடுகளினுள் வெள்ள நீர் புகுந்துள்ளது.

இதன் காரணமாக வீட்டு பொருட்கள், உணவு பொருட்கள், ஆவணங்கள், பாடசாலை மாணவர்களின் பாடநூல்கள், கால்நடைகள் என அனைத்தும் வெள்ள நீரில் பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் அதிகமானோர் மழை காரணமாகவும், வெள்ளம் காரணமாக தனது தோட்டங்களில் பயிரிடப்பட்ட மரக்கறி வகைகள் அனைத்தும் வெள்ளத்தினால் அடித்து செல்லப்பட்டதால் விவசாயிகள் பாரிய நட்டத்துடன் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை அடைகின்றனர்

குறிப்பாக இப்பகுதியில் வசிக்கும் தோட்ட தொழிலாளர்கள் தொடர்ந்து வெள்ளத்தினால் பாதிக்கப்படுவதாகவும் இவ்வாறான நேரங்களில் தம்மை யாரும் கண்டுக்கொள்வதில்லை என்றும் அரசியல்வாதிகள் வாக்கு வாங்குவதற்கு மட்டுமே தம்மை தேடி வருவதாகவும் இவ்வாறான நேரத்தில் தம்மை யாரும் பார்க்க வருவதில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

## நாட்டை மீண்டும் பாதாளத்திற்குள்...

சர்வதேச நாணய நிதியம், நாட்டுக்கு பரிந்துரைகளை விதித்துள்ளது. இவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது. மக்களுக்குத் தேவையான நாட்டை நாம் உருவாக்க வேண்டுமே ஒழிய, எதிர்ப்புக்களை வெளியிட்டு நாட்டை மீண்டும் பாதாளத்திற்குள் தள்ள முற்படக்கூடாது.

எதிர்ப்பினை வெளியிடும் தரப்பினர், அன்று சவாலை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது என்பதை நாமும் அறிந்துக் கொண்டுள்ளோம்.

இதிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் செயற்பாட்டையே இந்த வரவு - செலவுத்திட்டம் முன்வைத்துள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மாவீரர்...

செய்ய கோரியே பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

எதிர்மனுதாரர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் வாதத்தை தொடர்ந்து, வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம் நினைவு கூரும் உரிமையை யாரும் தடை செய்ய முடியாது.

தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் இல்லாமல் நினைவேந்தலை நினைவுகூர முடியும் என தெரிவித்த நீதிமன்றம் பொலிஸாரின் தடை கோரிய விண்ணப்பத்தை நிராகரித்தது. எதிர்மனுதாரர்களின் சார்பில் வி.மணிவண்ணன் உள்ளிட்ட பல சட்டத்தரணிகள் ஆஜராகினர்.

இதேவேளை, மாவீரர் நினைவேந்தலை தடை செய்யக் கோரி கடந்த வெள்ளியன்று மல்லாகம் நீதிமன்றத்தில் மானிப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் கட்டளை இன்று (21) வழங்கப்படவுள்ளது.

## ராஜபக்ஷர்களின் சொத்துகளை பறிமுதல் செய்ய வேண்டும்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, ராஜபக்சவின் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேரே காரணம் என உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அதற்காக உலக வங்கியின் விசேட பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு உலக வங்கியின் ஆதரவைப் பெற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பணம் கிடைத்தவுடன் இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக பயன்படுத்த முடியும் என்பதுடன், இலங்கையின் கடனை அடைக்கவும் முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமான குறித்த ஏழு பேரின் குடியுரிமையை ரத்து செய்ய வேண்டும் என எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் முன்மொழிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கொக்குதொடுவாய் மனித புதைகுழியில்

உடல் எச்சங்களுக்கு மேற்பகுதியில் காணப்பட்ட மண்கள் அகற்றும் பணியானது நேற்றையதினம் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக இரண்டாவது நாளாக இன்றையதினம் காலை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவ , தடயவியல் பொலிசார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த செப்ரெம்பர் மாதம் 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்ரெம்பர் (15) வரை அகழ்வாய்வுகள் இடம்பெற்றிருந்தது. இவ் அகழ்வு பணியில் 17 எலும்புக்கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையிலும், துப்பாக்கி சன்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயன்படுத்தும் இலக்க தகடு, உடைகள் உள்ளிட்ட சான்றுப்பொருட்களும் மீட்கப்பட்டிருந்த நிலையில்,

குறித்த அகழ்வுப்பணியானது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றையதினம் மீண்டும் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கில் அபிவிருத்தியில்

உள்ளிட்டவர்களே பொருளாதார வீழ்ச்சிக்கு பொறுப்புக்கூற வேண்டும் என உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு கவலையளிக்கின்றது.

இந்நாட்டில் உரத்தை இலவசமாக வழங்கிய தலைவர்தான் மஹிந்த ராஜபக்ச. எனினும், சில அதிகாரிகளின் ஆலோசனையால் உர விடயத்தில் கோட்டாபய ராஜபக்ச தவறான முடிவை எடுத்தார்.

கொரோனா நெருக்கடி ஏற்பட்டது. கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிகாலத்தில் காத்திரமான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதற்கு சிறந்த தலைமைத்துவத்தை கோட்டாபய ராஜபக்ச வழங்கினார்.

மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக ஏதேனும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டால் அது தேசிய குற்றமாகும். 30 வருடகால போரை அவர்தான் முடிவுக்கு கொண்டுவந்தார்.

வடக்கில் வீதி, பாலம், பாடசாலை, வைத்தியசாலை என அபிவிருத்தியில் புரட்சி செய்தார். இன்று வடக்கு, கிழக்கு மக்கள் தெற்கு மக்களுடன் இணைந்து செயற்படுகின்றனர்.

1983 இல் நாம் தவறிழைத்துவிட்டோம். நாட்டை விட்டு வெளியேறியவர்கள் தொழில் தருணர்களாகியுள்ளனர். இந் நாட்டுக்கு வந்து முதலீடு செய்கின்றனர்.

போரை முடிந்ததால்தான் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. யுத்தத்தை முடிப்பதற்கு செலவு செய்ததுபோல், யுத்தத்துக்கு பின்னர் அபிவிருத்திக்கும் அதிக செலவு செய்யப்பட்டது. ’ என்றார்.

## வரவு- செலவுத் திட்டத்தில்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. இரா.சாணக்கியன் கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

‘விடுதலை போராட்டம் மௌனிக்கப்பட்டு 14 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றும் பெரும்பாலான பகுதிகள் பின் தங்கிய நிலையில் உள்ளன.

தமது பிரதிநிதிகள் ஆளுங்கட்சியிலும், அரசாங்கத்திலும் அங்கம் வகித்தால் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்று பகல் கனவு கண்டு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் இரண்டு பிரதிநிதிகளை ஆளும் தரப்புக்கு தெரிவு செய்தார்கள் அவர்கள் அமைச்சு, இராஜாங்க அமைச்சு பதவிகளை வகிக்கிறார்கள்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களை சிறைக்கு அனுப்ப வேண்டும். அத்துடன் மோசடி செய்யப்பட்ட அரச நிதியை அரசுடமையாக்க வேண்டும் என்பது நாட்டு மக்களின் பிரதான வலியுறுத்தலாக காணப்படுகிறது. பொருளாதாரத்தை பாதிப்புக்குள்ளாக்கியவர்கள் மாத்திரமல்ல,அவர்களுக்கு துணை போனவர்களும் தண்டிக்கப்பட வேண்டும். பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களின் அரசாங்கம் தான் இன்றும் நடைமுறையில் உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. மீன்பிடி மற்றும் விவசாயத்துறை தொடர்பில் அரசாங்கம் உரிய அவதானம் செலுத்தவில்லை.

இலங்கையின் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல் விடுவிக்கப்படுகிறார்கள். இவ்வாறான பின்னணியில் எவ்வாறு கடற்றொழிற்றுறையை மேம்படுத்த முடியும். ’ என தெரிவித்துள்ளார்.






Crusty Arts Academy இயக்குனர் இசானாவின் ஒழுங்கமைப்பில் கொழும்பு மன்றரினா விடுதியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் கலாநிதி சப்ரினா பாரிஷ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்குவதை படங்களில் காணலாம்.

# இந்திய உதவியுடன் திருக்கோவில் இராஜகோபுரம் பூர்த்தியாக்கப்படும்!

## கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் நம்பிக்கை

**( வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி ஆலயமானது இந்திய சோழர்கால வம்சத்தினருடன் இணைந்து புதுப்பொலிவு பெறும்.

அதேவேளை ஆலயத்தின் ராஜகோபுரம் அழகாக பூர்த்தியாக்கப்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நம்பிக்கை தெரிவித்தார் .

திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் சூரசம்ஹார நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த சூரசம்ஹார நிகழ்வு ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அவ்வமயம் விஜயம் செய்த ஆளுநர் செந்தில் தொண்டமானை ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் மாலை சூட்டி வரவேற்றார்.

அவருடன் கிழக்கு மாகாண கலாச்சார பணிப்பாளர் ச.நவநீதன், பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பிரமுகர்கள் வரவேற்கப்பட்டனர்.

முதலில் ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆலயத்திற்கு சென்று வழிபட்டார்.ஆலய குரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்கள் அவருக்கு ஆசி வழங்கினார்.

பின்னர் சூரசம்ஹார நிகழ்வில் கலந்து கொண்டு பார்வையிட்டார்.

சூரசம்ஹார நிகழ்வு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் ஆலய குரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்கள் உதவியோடு மிகவும் சிறப்பாக நடைபெற்றபோது அங்கு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் ஆளுநருக்கு ஆசி வழங்கினார். அதன் போது ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையிலான பரிபாலன சபையினரும் உடனிருந்தனர்.




ஆலய சுற்று வளாகத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ இடம்பெற்ற சூரசம்ஹாரத்தில் முதல் தடவையாக பங்கேற்ற ஆளுநருடன் குழந்தைகள் முதல் பெரியோர் வரை புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

# தேசிய மட்ட குழுநடனப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கிரான் மத்திய கல்லூரி!!




**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

அனுராதபுரத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டிற்கான சமஸ்த லங்காதேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றிய மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட கிரான் மத்திய கல்லூரியின் கீழ் பிரிவு குழுநடனம் மாணவர்கள் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இக்கல்லூரியின் சார்பில் மாகாணமட்டப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்ற குழுநடனம் (கீழ் பிரிவு) மற்றும் குழுப்பாடல் (சிரேஸ்ட) அணியினர் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றியிருந்த நிலையில் குழுநடனத்தில் போட்டியிட்ட மாணவர்கள் முதலாம் இடத்தினைப் பெற்று கல்லூரிக்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

கிரான் மத்திய கல்லூரியின் வரலாற்றில் நடனப் போட்டி ஒன்றில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் எனவும், இந்த வெற்றி கல்லூரியின் முதல்வர் மா.தவராஜாவின் வழிகாட்டலில், ஆசிரியர்களான செல்வி. ந.வினோதா, திருமதி ஜனிஷாதயாரூபன் மற்றும் பழையமாணவன் ஜேசுசகாயம், சங்கீத ஆசிரியை திருமதி சேஷயனா சீகரன் ஆகியோரின் கடின முயற்சியில் பெறப்பட்டதென பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# தாதிய உதவியாளர் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த தாதிய உதவியாளர்களுக்கான தொப்பி அணிவித்து பட்டமளிக்கும் நிகழ்வு!!






**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு சிலோன் நேர்சிங் கல்லூரியில் தாதிய உதவியாளர் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த தாதிய உதவியாளர்களுக்கான தொப்பி அணிவித்து பட்டமளிக்கும் நிகழ்வு (19) திகதி மட்டக்களப்பு கல்லடியில் உள்ள தனியார் விடுதி மண்டபத்தில் இடம் பெற்றது.

மலர் மாலைகள் அணிவித்து அதிதிகள் வரவேற்கப்பட்டதுடன் ஒருநிமிட இறை வணக்கத்தோடு தேசியக் கீதம் இசைக்கப்பட்டு அதிதிகளினால் மங்கள விளக்கேற்றி நிகழ்வு ஆரம்பமானது.

சிலோன் நேர்சிங் கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி ஜெ. மியூறியா டிலாணியின் தலைமையில் ஆரம்பமாகிய நிகழ்வில், கலாச்சார நடனம் இடம்பெற்றதுடன் சிலோன் நேசிங் கல்லூரியில் ஒரு வருட கால தாதிய உதவியாளர் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த 100 தாதிய உதவியாளர்களுக்கு தொப்பி அணிவித்து பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு இதன்போது பதக்கம் அணிவிக்கப்பட்டு, நினைவுச்சின்னமும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது பிரதம அதிதி உள்ளிட்ட ஏனைய அதிதிகள் அனைவரும் கல்லூரி நிருவாகத்தினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

பிரதம அதிதியாக சுகாதார அமைச்சின் (திட்டமிடல்) பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியகலாநிதி எஸ்.ஸ்ரீதரன் கலந்துகொண்ட நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக மக்கள் ஜனநாயக காங்கிரசின் தலைவரும் முன்னால் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் வைத்தியகலாநிதி கே.மோகனகுமார், கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆர்.முரளீஸ்வரன்,

சிலோன் நேர்சிங் கல்லூரியின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர் எஸ்.கந்தசாமி, கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.அதிசயராஜ், மக்கள் வங்கியின் முகாமையாளர் ஈ.ஜீ.பிரகாஸ், எந்திரி ஏ.தம்பிமுத்து, கல்லூரியின் அதிபர் எம்.கே.சிவசிதம்பரம், தாதிய உத்தியோகத்த உயர் அதிகாரிகள் மற்றும் கௌரவம் பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# இலக்கியத் துறைக்கான இலக்கிய வித்தகர் விருது பெறும் கனகசூரியம் யோகானந்தன்

**(அ.அச்சுதன்)**

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வருடாவருடம் நடத்தப்பட்டுவரும் இலக்கிய விழாவில் கலைஞர்களை ஊக்குவிப்பு செய்து வருவது அறிந்ததே அந்தவகையில் 2023ஆம் ஆண்டிற்கான இலக்கிய வித்தகர் விருதுகளுக்காக தேர்வு செய்யப்பட்டவர்களில் சம்பூர் -திருகோணமலையைச் சேர்ந்த கவிஞர் கனகசூரியம் யோகானந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

ஓய்வுபெற்ற அதிபரான கனகசூரியம் யோகானந்தன் அவர்கள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இலக்கியப் பணிபுரிந்து வருகிறார்.இதுவரை ஐந்து கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

2006 கவிதை நூலுக்கான சாஹித்ய மண்டலப் பரிசினைப் பெற்றுள்ளார்.2019 இல் கவிதை நூலுக்கு 'பிரமிள்'விருதினையும் நகரமுதல்வர் விருதும் பெற்றுள்ளார்.



அத்தோடு இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்ட இவர் கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற வற்றில் தலைமை ஏற்று பல மாணவர்களை ஊக்குவித்து வருகிறார்.

நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும், பட்டிமன்ற பேச்சாளராகவும், இலக்கிய விமர்சகராகவும் , பேச்சாளராகவும் விளங்கி வருகிறார்.

உலகத்தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் உப தலைவர்களில் ஒருவராகவும் இருந்து பல நிகழ்வுகளில் பங்கேற்று வருகிறார்.

உலகத்தமிழர் பண்பாட்டுப் பேரவையின் சர்வதேச தலைவர் மற்றும் உறுப்பினர்களால் 'இணையுரைத் திலகம்'எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கலைகள் மீதும், இலக்கியங்கள் மீதும் தீராத காதல் கொண்டவர்.ஒருசில பாடல்கள், மற்றும் வலய, பாடசாலைக் கீதங்கள் இயற்றியுள்ளார்.

வளர்ந்து வரும் கலைஞர்களை ஊக்குவிப்பதோடு உலக கவியரங்கங்களிலும் பங்கு கொண்டு வருகிறார்

2023ஆம் ஆண்டுக்கான இலக்கிய விழாவில் கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ள நிலையில் இம்முறை அம்பாறை காரைதீவு கலாசார மண்டபத்தில் விழாவினை நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

# மட்டு கச்சேரியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 4 பேரை வழக்கில் இருந்து விடுதலை செய்யுமாறு கோரி ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் நகர்த்தல் மனு நீதிமன்றம் நிராகரிப்பு

**(கனகராசா சரவணன் )**

மட்டக்களப்பு கச்சேரியில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திகுழு 4ட்டத்தின் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதழராக தொடரப்பட்ட வழக்கில் இருந்து 4 பேரை விடுவிக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி எம். சுமந்திரன் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை (17) கொண்டுவந்த நகர்த்தல் மனு விண்ணப்பத்தை நீதவான் நிராகரித்தார்.

கடந்த மாச் மாதம் 30 ம்திகதி மட்டக்களப்பு கச்சேரியில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தின் போது மயிலத்தமடு மேச்சல் தலை பண்ணையாளர்கள் கச்சேரிக்கு முன்பால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கு கடமைக்கு நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை அவர்களது கடமையை செய்யவிடாமை மற்றும் சட்டவிரோத ஒன்றுகூடல் நிகழ்வில் உறுப்பினராக இருந்த குற்றச்சாட்டின் பேரில் 12 பேருக்கு எதிராக பொலிசார் நீதிமன்றில் வழக்கு தாக்குதல் செய்தனர்.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை (17) ஜனாதிபதி சட்டத்தரணி ஏம்.சுமந்திரன் இந்த வழக்கில் 3ம், 4ம், 8ம், 9ம் சந்தேக நபர்கள் தங்களது உரிமை தொடர்பாக ஒன்று கூடியதாகவும் அவர்களுடன் நா.உறுப்பினர்களை பொலிசார் உட்செல்ல அனுமதித்ததாகவும் பின்னரே பொலிசார் வேண்டு மென்று வழக்கு தாக்குதல் செய்துள்ளதாகவும் அந்த வழக்கில் இருந்து விடுதலை செய்யுமாறு கோரி நகர்த்தல் முன விண்ணப்பம் ஒன்றை மட்டு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றப் போல் முன்னிலையில் திறந்த மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

இந்த நகர்தல் மனு விண்ணப்பம் தொடர்பாக நீதவான் விசாரணையின் போது வழக்கு தாக்குதல் செய்த பொலிசார் குறித்த சம்பவம் தொடர்பாக அங்கு பெறப்பட்ட ஒளிபதிவு மூலமாக 12 சந்தேக நபர்களை இனங்கண்டு அவர்களை மன்றினூடாக அழைப்பானை நிறைவேற்றப்பட்டது ஆனாலும் அவர்கள் இதுவரை பொலிஸ் நிலையத்தில் வாக்கு மூலங்கள் கெடுக்கப்படாத காரணத்தால் விசாரணை முடிவுறாத காரணத்தை முன்வைத்ததையடுத்து சட்டத்தரணி சுமந்திரனால் கொண்டு வரப்பட்ட முன் நகர்த்தல் மனு விண்ணப்பத்தை நீதவான் நிராகரித்தார்.

# தொழில் தருனர்களை கௌரவிக்கும் நிகழ்வு 2023



**(ஹஸ்பர்)**

சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் ஒஐஇஅ நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாற்று திறனாளிகளை தொழிலில் இணைத்தல் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் ,தம்பலகாமம் ,கிண்ணியா, பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவில் உள்ள மாற்றுதிறனாளிகளை வேலை வாய்ப்புக்கு உட்சேர்த்தலில் சிறந்த திட்டமாக தெரிவு செய்யப்பட்டு கிண்ணியா மூதூர் ,தம்பலகாமம், பட்டிணமும் சூழலும் பிரிவுகளுக்கு உரிய மாற்றுதிறனாளிகள் தொழில் தருனர்கள் பிரதேச செயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் (19)நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மகளீர்சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளர் திருமதி யமுனா பெரேரா திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி ,சமூகசேவைகள்திணைக்களத்தின் பணிப்பாளர் அனோஜா ஹேரத்,உதவி பணிப்பாளர் ,ஒஐஇஅ திட்டத்தின் உத்தியோகத்தர்கள், சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட மனித வள உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

# சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசலையில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பாராட்டு நிகழ்வு



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

2023 ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் படி சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலையில் 30 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி, மூன்று மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளை பெற்று சாதனை படைத்து பாடசாலைக்கும் பாடசாலை சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

எம்.ஜே.எப்.செயினப் பிக்ரா 149,ஏ.ஆர்.றீமாஸ் ஹானி 147, எம்.எம்.எப்.ஸீனத் மனால் 146 புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்களையும்,கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஸி.என். றிப்கா அன்ஸார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிபர் பிரதி அதிபர்களுடன் இனணந்து தரம் ஐந்திற்கு பொறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் அதன் பகுதித்தலைவி எம்.எச்.யு.றொஸானா, , வகுப்பு ஆசிரியர் ஏ.ஆர்.எம்.சுஜாஜா, , பிரத்தியேக ஆசிரியர் முஹம்மட் நசிருதீன் , பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் தன்ஸீல் , மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

# இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள்,பாதணிகள் வழங்கும் நிகழ்வு.





**(நூருல் ஹுதா உமர் )**

திருகோணமலை மாவட்ட, மூதூர் கல்வி வலயத்தில் உள்ள கமு/மூ/லிங்கபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் அதி கஸ்ட குடும்பத்தினை சேர்ந்த மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள், பாதணி மற்றும் புத்தகப்பை வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தாமோதரம் பிள்ளை சதீஸ்வரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் (20) இடம்பெற்றது.

இப் பாடசாலையானது 1985 உள் நாட்டு கலவர காலப்பகுதி அதனைத்தொடர்ந்து யுத்த காலப்பகுதியிலும் பாதிப்புக்கு உள்ளான பாடசாலையாகும். தற்போழுதும் இவ் மண்டபத்தின் மேல் தோற்றமானது சிதைவடைந்து மழை காலங்களில் மழைநீர் வடிகின்றது. இக்காலங்களில் மாணவர்களின் எந்த ஒரு நிகழ்வுகளும், பாடசாலையில் எனைய நிகழ்வுகளை நடாத்துவதற்கும் முடியாதுள்ளது. மேலும் எமது பாடசாலையில் கல்வி செயற்பாட்டினை எடுத்துக்கொண்டால் சாதாரண தரத்திற்கு விஞ்ஞானம் மற்றும் கணித பாடத்திற்கான ஆசிரியர்கள் இது வரையும் இல்லாமல் காணப்படுகின்றனர். சனி, ஞாயிறு மற்றும் பாடசாலை விடுமுறை நாட்களில் பிரத்தியோக ஆரியர்களைக் கொண்டு கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றது.

சென்ற 2022 இல் சாதாரண தர பரீட்சைக்கு பாடசாலையில் இருந்து 11 மாணவர்கள் தொற்றி இருந்தனர் 11 மாணவர்களும் விஞ்ஞான பாடத்தில் 100/ சித்தியினையும் கணித பாடத்தில் 9 மாணவர்கள் அ தர சித்தினையும் பெற்று முதூர் கல்வி வலயத்தில் முதற்தர பாடசாலையாக இப் பாடசாலை காணப்படுகின்றது. எனவும் அதிபர் இங்கு உரையாற்றும் போது தெரிவித்தார்.

இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ.கஜருபன், சி.காந்தன், ஆகியயோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், பாதணி மற்றும் புத்தகப்பை என்பனவற்றை வழங்கி வைத்தனர். இந்நிகழ்வில் மூதூர் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். முசம்மில், ஆசிரிய ஆலோசகர் என்.எம். கலிலூர் ரகுமான், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கல்முனையில் தேசிய மொழி கல்வி சிங்கள பாடநெறியின் இறுதி நாள் நிகழ்வும்

# சிங்கள பாரம்பரிய உணவு முறை சார்ந்த கண்காட்சியும்!





**( வி.ரி.சகாதேவராஜா)**

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் அரச உத்தியோகத்தர்களுக்கான 100 மணித்தியாலங்கள் கொண்ட இரண்டாம் மொழி சிங்கள பாடநெறியின் இறுதி நாள் நிகழ்வும் சிங்கள பாரம்பரிய உணவு முறை சார்ந்த கண்காட்சியும் கல்முனை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

இந் நிகழ்வானது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் மிக சிறப்பாக முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ஜெ. மதன், வைத்தியசாலை கணக்காளர் எம்.கேந்திரமூர்த்தி, வைத்தியசாலை தாதிய பரிபாலகர் .என். சசிதரன், தாதிய பரிபாலகி திருமதி. எல். சுஜேந்திரன், வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் . தோமஸ் தேவஅருள், பிரதான சுகாதார முகாமைத்துவ உதவியாளர் திருமதி. எஸ். சுகுமார், சுகாதார உதவியாளர்களின் மேற்பார்வையாளர் எஸ். ஜெயகுணம், வளவாளர்களான திருமதி. பி. சந்திரகுமாரி, திருமதி. எம். பி. ஆமினா, தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் சிங்கள பயிற்சி பெற்ற அரச ஊழியர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் நிகழ்வில் பயிற்சி பெற்ற ஊழியர்களின் கலை கலாச்சார நிகழ்வுகள் நடைபெற்றதுடன் சிங்கள பாரம்பரிய உணவு முறை சார்ந்த கண்காட்சியும் நடைபெற்றது.

நிகழ்ச்சியினை தமிழ் மொழியில் சுகாதார உதவியாளர் .ந.சதீஸ்குமார் மற்றும் சிங்கள மொழியில் சுகாதார உதவியாளர் ரி. பிரசாந் ஆகியோர் தொகுத்து வழங்கியிருந்தனர்.

# மட்டக்களப்பில் கிழக்கு மாகாண மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானிகளின் ஒன்றுகூடல்








**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு மாகாண மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானிகளின் ஒன்றுகூடல் நிகழ்வு மட்டக்களப்பு லெகூன் உல்லாச விடுதியில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள தனியார் மற்றும் அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானிகள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## சொல்லத் துடிக்குது மனசு: 16

# மரபு, பாரம்பரியங்களை வேளிப்படுத்தும் சுயதெய்வ வழிபாடு

*பண்பாடு பழக்க வழக்கம் என்று
பண்பட்டு வாழ்ந்த நம் மக்கள் இன்றும்
பண்பாட்டை மறவாது சுயதெய்வ வழிபாட்டை
பண்புடன் பேணிப் பாதுகாத்து வருகின்றனர்*

மட்டக்களப்பு மாவட்டம் தொடர்பான முழுமை பெற்ற வரலாறு இன்றுவரை ஆய்வு நோக்கில் இது இவைதான் என ஆணித்தரமாகக் கூறும் வகையில் எழுதப்படாமை வேதனைக்குரிய விடயமாகும். எஸ்.ஓ.கனகரெத்தினம் எழுதிய Mo-n-og-ra-ph of the Ba-t-t-i-ca-l-oa Dis-t-r-i-ct நூல், எவ்.எக்ஸ்.சி.நடராஜா தொகுத்த 'மட்டக்களப்பு மான்மியம்' 'மக்கள் வளமம் வாழ்க்கையும்வித்துவான் கமலநாதன் பதிப்பித்த 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' வித்துவான் வி.சி. கந்தையாவின் 'மட்டக்களப்புத் தமிழகம்' 'மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம்' கவிக்கோ வெல்லவூர்க் கோபால், வரலாற்று ஆய்வாளர் செல்வி.க.தங்கேஸ்வரி எழுதி வெளியிட்ட நூல்கள், ஞா.சிவசண்முகம் எழுதிய 'மட்டக்களப்புக் குகன்குல வரலாறும் மரபுகளும்' ஆகிய நூல்களும் தேவை கருதிச் செய்யப்பட்ட ஒரு சில ஆய்வுக் கட்டுரைகள். தனிப்பட்ட முறையில் சிலர் எழுதிய மட்டக்களப்பு தொடர்பான வரலாற்று நூல்கள், முழுமையான ஆய்வுக்குட்படுத்தப்படாத சான்றாதாரங்கள் ஆகியனவும் காணப்படுகின்றன. மட்டக்களப்பு மானிடவியல், சமூக பண்பாட்டு, வரலாற்று ஆய்வுகள் முழுமை பெறாமையால் இப்பலவீனத்தையும் குறைபாடுகளை வைத்துக் கொண்டு ஒரு சிலர் சில வரலாறு இருட்டடிப்புக்களையும் செய்திருக்கின்றனர்.

லெமுரியா கண்டத்திலும், சிந்து வெளியிலும் யக்ஷ, திராவிட (இந்து), நாகர் வழிபாட்டு முறைகள் இருந்தமைக்கான பல ஆதாரங்கள் உள்ளன. பெரும்பாலும் இயற்கையோடு இணைந்த வழிபாட்டு முறைகளே பேணப்பட்டு வந்திருக்கின்றன. பிற்காலத்தில் இந்தியா முழுவதும் பரந்திருக்கின்றன. இதில் குறிப்பிடத்தக்க வழிபாடுகளில் ஒன்றுதான் யக்ஷ வழிபாடு. யக்ஷ்சர் என்பதற்குப் பூசிக்கத்தக்வர் என்பது பொருளாகும். இவ்வழிபாட்டினை ஒஸ்ரலோயிட் என்ற இனக் குழுமத்தினரே இயற்கையை மையப்படுத்திய வழிபாட்டினை மேற்கொண்டு வந்திருக்கின்றனர. ஒஸ்ரலோயிட் இனத்தவர்களில் பூசிக்கத்தக்கவர்களை யக்ஷ்ர் என வழிபட்டு வந்தனர். தமது இனத்தவர்களில் மக்களை அனர்த்தங்களில் இருந்து பாதுகாத்த யக்ஷன், யக்ஷி, குபேரன், பூதன், வியாததேவன், வியாதிதேவி ஆகிய முன்னோர்களை பூசிக்கத்தக்கவர்களாக மதித்து சுயவிழிபாடியற்றி வந்திருக்கலாம் என ஆய்வுகள் கூறுகின்றன. இவர்கள் மலை, காடு, ஆறு ஆகிய இயற்கையைப் பாதுகாப்பவர்களாகவும் கருதினர். அவர்களை மையப்படுத்தியே இயற்கையோடு இணைந்த சுயவழிபாட்டினை மேற்கொண்டிருக்கலாம் என மானிடவியல் ஆய்வாளர் மாக்ஸ்முல்லர் கருதுகின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறப்புமிக்க சுயவழிபாடியற்றி வழிபட்டு வந்த ஒஸ்ரலோயிட் இனத்தவர்கள் கி.மு. ஐந்தாம் நூற்றான்டுக்குப் பின்னர் மேற்கு இந்தியா, தென் இந்தியா போன்ற பிரதேசங்களில் இருந்து புலம்பெயர்ந்து இலங்கையின் பண்டைய மட்டக்களப்பு மாவட்டதில் மலையும் காடும் நீரும் சார்ந்த பிரதேசங்களில் குடியேறி இயற்கை வழிபாடியற்றி வந்திருக்கலாம் எனப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் குறிப்பிடுகின்றார். இதனைப் போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அலியார்வட்டை, விளாந்தோட்டம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண் ஆதாரங்களில் இருந்து அவ்விடங்களில் யக்ஷ் (யக்சர்) வழிபாடு செய்து ஒஸ்ரலோயிட் இனக் குழுமத்தினர் வாழ்ந்திருக்கலாம் என்பதையும் அறிய முடிகின்றது. இவர்கள் பெண் தெய்வ வழிபாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றனர் என்பதையும் கண்டெதுக்கப்பட்ட சுடுமண் ஆதாரங்களில் இருந்து அறிய முடிகிறது.

ஒஸ்ரலோயிட் இனக் குழுக்கள் இராஜகல் மலை, குடுமி மலை, கதிரகல் மலை, வியாத மலை, தாந்தா மலை, தும்பங்கேணி, வெள்ளிமலை, வக்கிகலக் குன்று, வெல்லாவெளிக் கல்லடி, சங்கமான் கண்டிமலை, பாணமைக் குன்று, உகந்தை மலை ஆகிய இலகுவாக ஏறி இறங்கக்கூடிய மலைகளிலும் அதனை அண்டிய காடுகளிலும் வாழ்ந்து வந்தமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவர்கள் கடைப்பிடித்த சிறுதெய்வ சுயவழிபாட்டு முறைகள் வளர்ச்சியடைந்த சமூகமொன்றின் தூய்மையான வழிபாட்டு முறையாக இருந்தென ஆய்வு ஆதாரங்களில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது. இத்தகைய சிறப்புமிக்க யக்ஷ் வழிபாட்டு முறை கி.மு 247 இல் பௌத்தமத வருகையைத் தொடர்ந்து பிற்பட்ட காலங்களில் திட்டமிட்டு அழிக்கப்பட்டிருக்கின்றன. நிறுவனமயப்படுத்தப்பட்ட பௌத்த மதத்தினரால் அரச ஆதரவுடன் யக்ஷ் வழிபாடு சிதைக்கப்பட்டதோடு அம்மக்களுக்கு என்ன நடந்தன என்பதனையும் அறிய முடியவில்லை.

தாந்தாமலை, வியாதமலை(விசாரமலை) ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பூதநாயகன், குபேரன் சிலைகள் கி.பி எட்டாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் தோற்றம் பெற்று இலங்கையிலும் பரவிய பிள்ளையார் வழிபாட்டுக்கு ஆதாரமாக இருப்பதாகவும் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. அதேபோல் யக்ஷ் ஒஸ்ரலொயிட் மக்களால் பூசிக்கப்பட்டுவந்த பெண் தெய்வங்களான யக்ஷி, வியாதிதேவி அகிய வழிபாட்டம்சங்கள் முதலாம் கஜபாகு மன்னன் காலத்தில் இலங்கையில் பத்தினி தெய்வம் போன்ற பெண் தெய்வ வழிபாடு தோற்றம் பெறுவதற்கும் காரணமாக அமைந்திருக்கலாம் எனப் பேராசிரியர் பரணவிதான குறிப்பிடுகின்றார். பிற்காலத்தில் குமண, பாணமை, பட்டிமேடு, கோராவெளி, களந்தன, லவானை ஆகிய இடங்களில் காடுறைத் தெய்வம், கானமா பாவை என இயற்கையோடு ஒத்து வழிபடப்பட்டுவந்த பெண் தெய்வங்கள் பிற்காலத்தில் பத்தினி(கண்ணகி) வழிபாடாக மாற்றம் பெற்றிருக்கலாம் எனவும் ஒருசாரார் நம்புகின்றனர். இது பற்றிய மானிடவியல், சமூக பண்பாட்டு வரலாற்றாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகின்றது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகப் பிரபல்யமான வழிபாடாக சிறுதெய்வ வழிபாடு கொள்ளப்படுகிறது. இதனைக் கிராமிய வழிபாடு எனவும் அழைத்து வந்தனர். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இவ்வழிபாடு பிரபல்யம் பெற்றிருந்தாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமக்கே உரித்தான சிறப்பியல்புகளுடன் இவ்வழிபாடு இயற்றப்படுவந்ததைக் காணக்கூடியதாக உள்ளது. ஆகம விதிகளுக்கு உட்படாது தெய்வங்களை வழிபாடு செய்யும் முறையினை சிறு தெய்வ வழிபாடு எனக் குறிப்பிடுகின்றனர். ஆரம்ப காலத்தில் இவ்வழிபாடு இயற்கைக்கு நன்றி செலுத்தும் வகையிலும், பின்னர் பூசிக்கத் தக்கவர்களுக்காகவும். தெய்வங்களுக்குரிய கல், வேல், சூலம், ஈட்டி, கருங்காலிப் பொல்லு ஆகிய ஆயுதங்கள், குறியீடுகள், சின்னங்களை அதற்கென அமைக்கப்பட்டமேடை, பந்தல், மடை ஆகியவற்றில் வைத்தும், மரத்தடி, குளக்கரை, புதர்கள், கறையான் புற்றுக்கள், மலையடிவாரம் ஆகிய இடங்களில் அவற்றை வைத்தும் வழிபட்டு வந்திருக்கின்றனர். காலப் போக்கில் தெய்வங்களுக்கு உருவம் கொடுத்து கோயில் அமைத்தும் வழிபட்டு வந்தனர். இவ்வழிபாடுகள் சுயவழிபாட்டை ஒட்டியே முக்கியத்துவம் பெற்றதெனலாம். இதற்கிடையில் தெய்வங்களை வழிபடுவதற்கு மந்திரங்கள், பத்ததிகள் ஆகியனவும் தோற்றம் பெற்று வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ்வழிபாடுகளைச் சுயமாகவும், பூசாரிமார், கட்டாடிமார்களைக் கொண்டும் வழிபாடுகள் இயற்றி வந்தனர்.



**சின்னத்தம்பி குருபரன்**

இந்தியாவிலும் இலங்கையிலும் 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் நகரங்களிலும் கிராமங்களிலும் ஆகம மயப்பட்ட ஆலயங்கள் அமைக்கப்பட்டமையால் கிராமிய வழிபாடுகளில் இருந்த பல சிறு தெய்வங்களுக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டு ஆகம முறைப்படி வழிபாடுகள் செய்ய ஆரம்பித்தனர். அதன் முதல் கட்டமாக நரபலி, மிருகபலி ஆகியன சிறுதெய்வ வழிபாடுகளில் இருந்து நீக்கப்பட்டன. வழிபாடியற்றும் முறைகளில் நாகரிகமான பல அம்சங்கள் புகுத்தப்பட்டன. பல ஆலயங்களில் ஆகம விதி முறைகள் கற்ற இந்துக் குருக்கள்மாரே மந்திர உச்சாடனம் செய்தும் பத்ததி முறைப்படியும் பூசைகளையும் சடங்குகளையும் செய்ய ஆரம்பித்தனர். கிராமிய சிறு தெய்வ வழிபாடுகளுக்குள் அடங்கும் அம்மன், வீரபத்திரர், வைரவர், ஐயனார், நாகதம்பிரான் போன்ற பல தெய்வங்களுக்கு ஆகம முறைப்படி கோயிகள் அமைக்கப்பட்டு பூசைகள், விழாக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில இடங்களிலும் ஆலயங்களிலும் மரவுகள், சம்பிரதாயங்கள் மாறாத வகையில் பூசாரி, கட்டாடிமார்களைக் கொண்டு பூசைகள் விழாக்கள் இயற்றப்பட்டு வருவதைக் காணலாம். சிறு இவ்வழிபாடுகளில் வீடுகளிலும் தொழில் முறையான இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் சுயவழிபாடுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.

பூசாரி அல்லது கட்டாடி தனித்து அல்லது குடும்பத்தோடு இணைந்து வழிபாடு செய்வதனை சுயவழிபாடு என்பர். பல வீடுகளில் இவ்வழிபாட்டினை வீட்டுத் தலைவன், தலைவி மூத்தோர் செய்து வருகின்றனர். வீடுகளில் நடைபெறும் புதிரெடுத்தல், புதிருண்ணல், சர்க்கரை அமுது கொடுத்தல், வைரவர் சடங்கு, தண்ணிர்ச் சோற்றுப் பள்ளயம், நவராத்திரி வழிபாடு, கார்த்திகை விளக்கீடு, மரணச் சடங்குக் கிரியைகள், பிதிர் வழிபாடு, காணி, நிலம் காவல் பண்ணுதல், சில விசேட பூசைகள், கழிப்புக்கள் ஆகிய பலவற்றைக் குறிப்பிடலாம். வீட்டுக்கு வெளியே மரத்தடி, குளக்கரை, மலையடிவாரம், புதர்கள், புற்றுக்கள், ஆளக் கிணற்றடி (பாதாள வைரவர்) ஆகிய இடங்களிலும், நரசிங்க வயிரவர், கால வயிரவர், சுடலை வயிரவர், முன்னடித் தம்பிரான், புளியமரத்தடித் தம்பிரான், புளியமரத்தடி வைரவர், காளி, வதனமார், குமார தெய்வம், பேயாண்ட நயினார், காளமாதுனி ஆ'யோருக்காகவும், விவசாய நடவடிக்கைகளின் போது ஏர் தொடங்குதல், விதைப்பு, முளை காணலல, கதிர் காணல், அறுவடை, சூடு வைத்தல், சூடு மிதித்தல், களவெட்டி கால் செய்தல், களவெட்டிப் பொங்கல் செய்தல், நாக தம்பிரானுககுப் பொங்கல் வைத்தல் ஆகியவற்றையும் சுய வழிபாட்டுக்குள் அடக்குகின்றன.

உலகின் முதன் முதல் சுய தெய்வ வழிபாடு தோற்றம் பெற்றன. அதனைப் பின்னர் அதனைச் சிறு தெய்வ வழிபாடு என அழைத்தனர். சுய தெய்வ வழிபாடுகளில் பெண் தெய்வ வழிபாடு, வயிரவர் வழிபாடு போன்றவற்றுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவை கிராமிய (சிறு தெய்வ) வழிபாட்டில் மிகப் பிரதானமான இடத்தைப் பிடித்துள்ளன. இவ்வழிபாடு தொடர்பாகக் காவியம், அகவல், ஊர்சுற்றுப் பாடல்கள், பத்ததி, உலா, தாலாட்டு, கும்மி, பிரார்த்தனை, தோத்திரம், பஞ்சமம், குளுத்தி, அம்மானை ஆகியவற்றைக் கொண்டு பல நூல்கள் வெளிவந்துள்ளன. அம்மன் வழிபாடு தொடர்பான பரந்த அடிப்படையிலான தொகுப்பு நூலாக அட்டப்பள்ளம் சி.கணபதிப்பிள்ளை அதிபர் அவர்கள் பதிப்பித்த 'மகாமாரித்தேவி திவ்விய கரணி' நூல் விளங்குகிறது. இந்நூல் மட்டக்களப்பு மாவட்டத்தின் பாரம்பரிய சிறு தெய்வ வழிபாட்டின் பல சிறப்புக்களை வெளிக்கொணர்ந்திருக்கிறது.

சுயவழிபாடுகள் சிறு தெய்வங்கள்மீது மக்கள் கொண்டிருந்த தீவிர பக்தி, நம்பிக்கை, அச்சம், பயம் காரணமாக கிராமிய மக்களிடத்தில் பெருமளவு செல்வாக்குப் பெறுவதற்குக் காரணமாக அமைந்தன. நகர்ப்புறங்களில் பல இடங்களில் இன்றும் நம்பிக்கையுடன் இவ்வழிபாடு பேணப்பட்டு வருகின்றன. ஆகமமயமாக்கலும், நாகரிக மாற்றங்களும், தொழினுட்ப வளர்ச்சியும் சுயவழிபாட்டில் சிறிதளவு பின்னடைவை மாத்திரமே ஏற்படுத்தி இருக்கின்றன. சடங்குகளின் போது உருக் கொண்டு பேயாடுதல், உடு அடித்தல், கட்டுரைத்தல், மந்திரித்த நூல் கட்டுதல், எலுமிச்சம் பழம், பூ ஆகியன மந்திரித்துக் கொடுத்தல், உருக் கொண்டு ஆடும் பேயைக் கட்டுதல், கட்டு வெட்டுதல் ஆகிய நிகழ்வுகள் இப்போதும் நடைபெறுகின்றன. நரபலி, ஆடு, மாடு, கோழி ஆகியவற்றை பீடத்தில் வைத்துப் பலி கொடுக்கும் வழக்கு நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக ஆடு, மாடு, கோழி ஆகியவற்றுக்கு நீராட்டி, மாலை அணிவித்து, மஞ்சள், குங்குமம் பூசி, பிடத்துக்குக் கொண்டு வந்து. கழிப்பு, மந்திர உச்சாடனம் செய்து, கற்பூர ஆராதனை காட்டி, நீர் தெளித்து அனுப்பி விடுவார்கள். சில இடங்களில் அதற்குப் பதிலாக இலுமிச்சம் பழம், நீத்துப் பூசணிக்காய் ஆகியவற்றை மந்திரித்து வெட்டுவார்கள். சடங்கு நிறைவுற்றதும் நேர்த்திக் கடனாகத் தெய்வத்துக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆடு, மாடு, கோழி ஆகியன ஏலத்தில் கூறி விற்பனை செய்யப்படும்.

சிறுதெய்வ வழிபாடுகள் தொடர்பாகப் பல நூல்கள், கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் கலாபூசணம் க.மகேஸ்வரலிங்கம் (மகிழை மகேசன்) எழுதி வெளியிட்ட 'மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடுகள் ஓர் அறிமுகம்'(1996) என்ற நூல் சிறு தெய்வ வழிபாடுகள் தொடர்பான புரிதலுக்குச் சிறந்த நூலாக அமைகின்றது. இக்கட்டுரையில் சுயதெய்வ வழிபாட்டில் இருந்து அண்மைக் பாலங்களில் வழக்கிலிருந்து மறைந்த வதனமார், முன்னடித் தம்பிரான் ஆகிய வழிபாடுகள் மாத்திரம் உதாரணத்துக்காகச் சிறிது நோக்கப்படுகின்றன.

வதனமார் வழிபாடு தொடர்பாகப் பல நூல்களில் கட்டுரைகளாக வெளிவந்துள்ள. வதனமார் வழிபாடு பற்றி மட்டக்களப்பு மாவட்டத்தில் பல செய்திகளும் சடங்க மறைகளும் நிலவியமை பற்றிக் கிடைக்கப் பெற்ற ஆதாரங்களைக கொண்டு அறிய முடிகின்றன. வதனமார் யானை கட்டும் அகவல், வதனமார் ஊர் சுற்றுக் காவியம், வதனமார் குழுமாடு கட்டும் காவியம், தேன் வெட்டும் காவியம், நாதனை வில்லை கட்டுப் பத்ததி ஆகியன கொணடும் விரிவாக அறிய முடிகிறது. வதனமார் சடங்கு நடத்துதல் தொடர்பாக வெளிமடைப் பத்ததி முறை, துளிமடைப் பத்ததி முறை, வில்லை கட்டுப் பத்ததி முறை தெளிவாகக் கூறுகின்றன. வதனமார் வில்லைகட்டுச் சடங்கு ஆரம்ப காலத்தில் திருக்கோயில், நாதனை, திருகொணமலை ஆகிய இடங்களில் நடைபெற்றதாக அறிய முடிகிறது. வதனமார் இந்தியாவில் அயோத்தி நகரில் வாழ்ந்த சுவாதி அம்மனுக்குத் திருமாலின் அருளினால்ல் பிறந்வர்கள் என்றும், அவர்கள் வளர்ந்த பின்னர் மாயமாய் மறைந்த எருமைக் கடாவைத் தேடி தமிழ்நாட்டு வழியாகக் கடல் கடந்து திருகோணமலை, தமன்கடுவை, தம்பலகாமம், கந்தளாய், கொட்டியாரம், கிளிவெட்டி, வதனவெளி, தளவைக்குடா, நாகமுனை, அறுகாமம், வீரமுனை, கல்முனை, காரைநகர், தம்பட்டை, பட்டிநகர், பாணமை, உகந்தை ஆகிய இ'டங்களுக்குச் சென்று இறுதியாக நாதளை, மணற்பிட்டி, வில்லுக்குளம் ஆகிய இடங்களில் நிரந்தரமாக வாழ்ந்ததாக வதனமார் ஊர் சுற்றுக் காவியம் தெளிவுறுத்துகின்றது. அவர்கள் வீர, தீர சாகசங்கள் நிறைந்தவர்களாகவும், தெய்வ அருள் பெற்றவர்களாகவும் வாழ்ந்து மடிந்திருக்கின்றனர். மக்கள் அவர்களைப் பூசித்துப் பல நூற்றாண்டுகளாக வழிபட்டு வந்திருக்கின்றனர் என்பதையும் நாதனை வில்லைகட்டுச் சடங்க பற்றியும் 17 ஆம் நூற்றாண்டு நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டுக் குறிப்பொன்று குறிப்பிடுகிறது.

வதனமாரில் ஒருவரே முன்னடித்தம்பிரான் ஆவார். இவர் எருமைக்கடாவைத் தேடிச் சென்று காணாமல் போனவர் என்பதனால் காணமத்தவதனன், வன்னித் தம்பிரான் எனும் பெயர்களாலும் அழைக்கப்பட்டிருக்கின்றார். காடுகளில் மேயச் சென்ற பசு மாடுகளைப் புலி, கரடி, சிங்கம் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பவராகவும், பட்டியில் உள்ள மாடுகளுக்கு நோய், நொடிகள் வராமல் பாதுகாப்பவராகவும் கருதி முன்னடித்தம்பிரானை வழிபட்டு வந்தனர். இவ்வழிபாட்டை நிகழ்த்துவதற்கு அகவல், காவியம், பத்ததி எதுவுமில்லை. சுயவழிபாடாகப் பசு மாடு வளர்ப்போர் பசுக்கள் கன்று ஈனும் பருவகாலத்தில் பட்டிக் காலைக்கு அருகிலுள்ள கானகத்தில் கம்பு, கொத்துகளால் பந்தல் போட்டுப் பசுவில் இருந்து கறந்தபால், கைக்குத்துப் பச்சை அரிசி கொண்டு புது மண் பானையில் வேறு எதுவும் கலக்காமலும், அகப்பை கொண்டு கிண்டாமலும் பொங்குவார்கள். தாமரைத் தண்டில் இருந்து நூல் திரித்தெடுத்து, அந்நூலைக் கொண்டு பசு நெய்யில் விளக்கேற்றுவார்கள். கொத்துப் பந்தலுக்கு மேல் களுவிய வெற்றிலை பாக்கினைப் பரப்பி, அதன்மேல் காம்பு வெட்டாத மொந்தன் வாழைப் பழத்தை வைத்து தாமரை, அலரி, அல்லிபூச் சாத்துவார்கள். சில இடங்களில் சீப்பு வெட்டாமல் வாழை குலையோடு பந்தலில் சாத்தி வைப்பார்கள். வாழை இலை பயன்படுத்தமாட்டார்கள். பொங்கல் பானையை இறக்கிப் பானையுடன் பந்தலில் வைத்துக் கற்பூரம் ஏற்றியதும் எல்லோரும் அங்கிருந்து சென்று ஒரு சில விநாடிகளின் பின்னர் எல்லோரும் பந்தலுக்கருகில் வந்து வழிபட்டுத் தண்ணீர் தெளித்து எல்லோரும் உண்பார்கள். இதில் பானை உட்பட எந்தப் பொருளையும் வீட்டுக்கு எடுத்துச் செல்லமாட்டார்கள். இவ்வழிபாட்டினை எங்கள் பசு மாட்டுக் காலைக்கு அருகிலுள்ள காட்டில் இவ்வழிபாட்டினை நிறைவேற்றியமை பற்றி எனக்கு இன்றும் ஞாபகம் இருக்கிறது. முன்பு பசு மாடு மாட்டுப் பட்டி வைத்திருப்போர் முன்னடித்தம்பிரானையும் எருமை மாட்டுப் பட்டி வைத்திருப்போர் வதனமாரையும் வழிபட்டு வந்திருக்கின்றனர்.

இவ்வாறு மிகச் சிறப்புமிக்க பல சுயவழிபாடுகள் நம்மிடம் இருந்து காணாமல் போயிருக்கின்றன. அவை பற்றி எல்லாம் மானிடவியல், சமூக பண்பாட்டு, வரலாற்று ஆய்வுகள் செய்யப்பட்டு ஆவணப்படுத்தப் படல் வேண்டும்.

*மட்டக்களப்பாரின் பண்பாடு
பாரம்பரியம் எடுத்தியம்பி
மட்டற்ற மகிழ்ச்சி தரும் சுதேச வழிபாடும் உளவென்போம்
சுதேச வழிபாடு தொடரும்.*

# போர்ப் படுகொலை அடுத்துப் பொருளாதாரப் படுகொலை, இதனையும் மக்கள் மறப்பார்களா?





**ஞா.ஸ்ரீநேசன்**
**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மட்டக்களப்பு**

இலங்கையில் போர்ப் படுகொலை இனப்படு கொலை நடைபெற்றன என்பதைத் தமிழர்கள் உட்பட நேர்மையான பிற இன மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆனால், பேரினவாதிகள் இதனை ஏற்க மாட்டார்கள். அவர்களுடன் பிழைப் புக்காக இயங்கும் தமிழ் பண, பதவி வெறியர்கள், ஒட்டுக்குழுக்கள் இதனை உள்ளூர அறிந்தாலும்,

வடிகட்டிய சுயநலத்தால் அந்த உண்மையைக் கூற மாட்டார்கள்.

அதேவேளை, உயர் நீதிமன்றத்தால் பொருளாதா ரக் குற்றவாளிகள் யாவர் என்பதை அடையாளப் படுத்தப்பட்டுள்ளார்கள். இதனை நாட்டிலுள்ள சகல இன மத மக்களும் ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகின்றோம். ஏனெனில் ராஜபக்க சகோதரர் களால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரக் குற்றத் தால் நாட்டிலுள்ள சகல மக்களும் பாதிக்கப்பட் டுள்ளார்கள்.

பொருளாதாரக் குற்றத்தின் மத்தியில் சட்ட விரோ தமாக இலாபம் அடைந்த ஒரு கும்பலும் இருக் கவே செய்கின்றன. அக்கும்பல் நீதி நேர்மையற்ற இலாப நோக்கக்காரர்களாகவே இருக்க முடியும்.

இலங்கையில் ஜனநாயகம் இனநாயகமாக மாறி யதால் போர்க்குற்றம், இனப்படுகொலை பற்றி பேரினவாதிகள் கரிசனை காட்டுவதில்லை. அவர் கள் இனவழிப்பில் ஈடுபட்டவர்களை சிங்கள கதா நாயகர்களாகப் பார்க்கின்றனர்.

இனப்படுகொலை போர்க்குற்றம் பற்றிய பார்வை இரு துருவங்களாக உள்ளன. சிங்களவர், சிங்கள தேசிய இனவாதப் பார்வையிலே உள்ளனர். தமிழர்கள் தமிழ்த் தேசிய உரிமைப் பார்வையில் உள்ளனர்.

அந்த வகையில், இந்த நாட்டில் இரு முரண்பட்ட தேசங்களுக்கான நிலையைக் காட்டுகின்றது. ஒற் றையாட்சி சிங்கள இனநாயகத்தால் இதனைத் தீர்க்கவே முடியவில்லை.

போர்க்குற்றத்தைப் பொறுத்தவரை சிங்கள இன வாதர்கள் கோணல் பார்வை கொண்டவர்களாக இருந்தாலும், பொருளாதாரக்குறம் பொருளாதாரக் கொலை என்பது சகல மக்களையும் கடுமையாகத் தாக்கியுள்ளது.

எனவே, பொருளாதாரக்குற்றவாளிகள் தண்டிக் கப்பட வேண்டும் என்பதில் தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்லாமல், சிங்கள மக்களில் கணிசமானவர் கள் ஒத்த நிலைப்பாட்டில் உள்ளனர்.

இதனைத் தவிர்ப்பதற்காக ராஜபக்சக்கள் போர் வெற்றிகளையும், தேரர்கள் அடிப்படைவாதிக ளின் நற்சான்றிதழ்களையும் நாடி வருகின்றனர். இதனால், ராஜபக்சக்கள் விகாரைகளை நாடி வரு கின்றனர்.

எது எப்படியாக இருந்தாலும் மொட்டுக்கட்சியா னது 2020 தேர்தலில் பெற்ற 144 பாராளுமன்ற ஆச னங்களில் 80 வீதத்திலும் அதிகமான ஆசனங்களை இழக்கும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

தற்போதைய நிலையில் பொருளாதாரக் குற்றவா ளிகளாக அடையாளம் காணப்பட்ட ராஜபக்சக்கள், மொட்டுக் கட்சியினர் தேர்தலை விரும்பவில்லை. எனவே 2024 வரவு செலவுத் திட்டத்தை விமர்சித்தா லும், அதற்கு சார்பாக வாக்களித்து வெற்றி பெறச் செய்யவே விரும்புவர். தேர்தல் தில்லுமுல்லுகளை எதிர்காலத்தில் மொட்டுக் கட்சியினால் செய்வதும் கடினமாகவே இருக்கும்.

கடந்த தேர்தலில் பாரிய குற்றம் கூட தேர்தல் தில்லுமுல்லுகளால் வெற்றி பெற்றுள்ளனர். இப் படியானவர்கள் வென்றதால், பொருளாதாரத்தில் மோசடிகள், ஊழல்கள் அதிகரித்தே உள்ளன.

இவர்கள் தமது வீட்டுப் பொருளாதாரங்களை சட்டவிரோதமாக அதிகரித்துள்ளர்.

அதே வேளை நாட்டுப் பொருளாதாரத்தை பூச்சி யத்தை நோக்கித் தள்ளியுள்ளனர்.

இந்த நிலையில் போர்க்குற்றத்தை பேரின வாத வெற்றியின் ஒரு பக்கமாக சிங்கள மக்கள் பார்த்தாலும், பொருளாதாரக் குற்றத்தை மன்னிப் பதற்கு வாய்ப்பு இல்லை. இதனையும் கடப்ப தற்காக மொட்டுக் கட்சியின் இனவாத முரண்பா டுகளை அதிகரிப்பதற்குப் பாரிய சதிகளைச் செய் வதற்கு முயற்சிப்பர. மட்டக்களப்பில் அம்பிட்டிய சுமணரத்ன தேரரும் அதில் ஒருவராக இருக்கலாம். இவர் பல இனவாத செயற்பாடுகளை தமிழர்கள் மத்தியில் உருவாக்கி வருகின்றார்.

பொலிசார் தமிழர்களை அடக்குவதில் காட்டும் தீவிரம், தேரர் விடயத்தில் இல்லை. ஆட்சி அதி காரக் கதிரைக்காக மொட்டுக் கட்சியும் கையாட் களும் எதுவும் செய்வர். ஆனால் எதிர்காலத்தில் பொருளாதாரக் குற்றத்தைக் கடந்து வெல்வதற்கு வாய்ப்பளிக்காது.

வறுமைக்குள் தள்ளப்பட்ட இலங்கை மக்கள் அக்குற்றத்தைச் செய்த குற்றவாளிகளிடம் இருந்து சட்ட ரீதியாக நஷ்டங்களைக் கோரவும் வாய்ப்பு உள்ளது. பொருளாதாரக் குற்றவாளிகளை சட்ட ரீதியாகவும், வாக்களிப்பு மூலமாகவும் தண்டிக்க இடமுள்ளது.

# தரம் 5 தேர்வு ஓர் அறிவியலாளர் பார்வையில்.....

எனது மகன் தற்போது 5 ஆம் வகுப்பு படித்து வருகிறார், அவரது புலமைப்பரிசில் பரீட்சை மதிப்பெண்கள் குறித்து பலர் என்னிடம் கேட்கின்றனர். அவர் புலமைப்பரிசில் பரீட்சை எழுதவில்லை என நான் பதிலளித்தேன், இது பெரும்பாலானோரை ஆச்சரியப்படுத்தியது. ஏனெனில் இந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதற்காக நடத்தப்படுகிறது என்பது நம்மில் பலருக்குப் புரியவில்லை. இந்த தேர்வு இரண்டு முக்கிய நோக்கங்களுக்காக அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது:

1) நன்கு படிக்கும் மாணவர் ஒருவர் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பத்தில் இருப்பவரானால், இப்பரீட்சியில் தேர்ச்சி பெறுவது மூலம் அரசாங்கம் வழங்கும் உதவித்தொகையை அவரது கல்விக்காக பெறமுடியும்.

2) திறமையான மாணவர் குறைந்த வளங்களைக் கொண்ட பின்தங்கிய பாடசாலை ஒன்றில் படிக்கும் சந்தர்ப்பங்களில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் நாட்டில் உள்ள சிறந்த பாடசாலை ஒன்றிற்கு அனுமதி பெற முடியும்.

கண்டியின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான திரித்துவக் கல்லூரியில் (Trinity College) எனது மகன் கல்வி கற்கிறார்; எனவே மேற்கூறிய இரண்டு நோக்கங்கள் ஒன்றுக்காகவும் எனது மகன் பரீட்சை எழுதவேண்டிய அவசியம் இல்லை எனும்போது நான் இந்த தேவையில்லாத அதுவும் சமூகத்திலும், மாணவர்கள் பெற்றோர்கள் மனதிலும் பாரிய தாக்கங்களை தற்போது ஏற்படுத்திவரும் இந்த பரீட்சையை ஏன் எழுத சொல்ல வேண்டும்? Trinity College ஆனது மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் சுதந்திரம் அளிக்கிறது; மாணவர் பரீட்சை எழுத விரும்பினால் மட்டுமே பதிவு செய்து பரீட்சை எழுத முடியும். இது ஓச்ணdy Trinity College செய்யும் ஒரு பாராட்டக்கூடிய விடயம் (மற்றய பெரிய பாடசாலைகளும் இதை பின்பற்றி தங்கள் பிரதேசத்தில் உள்ள பின் தங்கிய பாடசாலை மாணவர்களுக்கான வாய்ப்பை அதிகரித்திட உதவிட வேண்டும்). எனவே, எனது மகன் பரீட்சையில் பங்கேற்க வேண்டாம் என முடிவு செய்தோம். எனது மகன் 4 ஆம் வகுப்பு அல்லது அதற்கு முன்பு படித்ததைப் போலவே பாடசாலையில் 5 ஆம் வகுப்பை முடிக்க போகிறார். அவர் வகுப்பில் சிறப்பாகச் செயல்படுகிறார், பெற்றோர்களாகிய நாங்கள் அவரது கல்வி மற்றும் இணைப்பாடவிதான விடயங்களில் அவரது செயற்பாடுகளில் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த புலமைப்பரிசில் பரீட்சையில் எனது சொந்த அனுபவத்தையும் நினைவுகூர்கிறேன். 1987 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை (அப்போது இத்தேர்வு தரம் 6 இல் நடைபெறும்) பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றான (அப்போது மிகவும் பின்தங்கிய பாடசாலை) புளியாவத்தை TMV இல் எடுத்தேன். நிச்சயமாக, நான் படிக்கும் போது என் பெற்றோர்கள் எனக்கு ஒருபோதும் சிரமம் கொடுக்கவில்லை, பல tution classPO சென்றதில்லை (ஆனால் இப்போது பல பெற்றோர்கள் அப்படி இல்லை, இது தற்போது பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான கௌரவ பரீட்சையாக மாறிவிட்டது). புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஆனால், என்னால் 27 நாட்கள் மட்டுமே அங்கு படிக்க முடிந்தது. என்னை மீண்டும் புளியாவத்தை TMVக்கு அழைத்துச் செல்லும்படி எனது தந்தைக்கு தினமும் கடிதம் எழுதினேன். பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஒரு மிகவும் சிறந்த பாடசாலை ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்த வயதில் எனக்கு அப்பாடசாலை பொருத்தமாக இருக்கவில்லை, நான் அதுவரை ஹட்டன் டவுனுக்கு (எனது கிராமம்/ தேயிலை தோட்டத்திற்கு அருகிலுள்ள நகரம்) கூட சென்றதில்லை. 12 வயதில் கொழும்பு எனக்கு புதிய சூழல், அப்பாடசாலையில் என் சக மாணவர்களை (அவர்களில் பெரும்பாலோர் மிகவும் பணக்காரர்கள், மற்றும் ''பெரிய உருவம் உடையவர்கள்''), ஆசிரியர்கள், கட்டிடங்கள் மற்றும் சாலைகள், வாகனங்களைப் பார்த்து பயந்தே போனேன். சிறிது காலம் கழித்து சரியாகிவிடும் என்று என் தந்தை நினைத்தார், ஆனால் அவர் தினமும் நான் அழுதுகொண்டே எழுதி அனுப்பும் கடிதங்களை கண்டவுடன் இறுதியில் என்னை கொழும்பில் இருந்து அழைத்து சென்று மீண்டும் புளியாவத்தை TMVக்கே சேர்த்துவிட்டார். சாதாரண தோட்ட தொழிலாளியான எனது தந்தை அவரது வரம்பிற்கு மீறி தியாகம் செய்து என்னை பெரிய பாடசாலையில் படிக்க வைக்க நினைத்தார். நான் எப்படியாவது சிறந்த கல்வியை கற்றிட வேண்டும் என அவர் பட்ட கஷ்டங்களை மிகவும் அருகில் இருந்து பார்த்ததாலேயே என் அறிவிற்கு எட்டிய வரையில் என்னால் கல்வியில் சிறந்து பயணித்திட முடிந்தது. என்னை எனது தந்தை படி படி என வற்புறுத்தியதில்லை, மாறாக நான் நீண்ட நேரம் இரவில் கண்முழித்து படிப்பதை பார்த்து என்னை சீக்கிரம் படுக்க சொல்லியே சொல்வார். எனது மிகப்பெரிய பலமே என் தந்தையின் அர்ப்பணிப்பு தான். அவரைப் போல ஒரு 50% ஆயினும் எனது மகனுக்கு நான் ஒரு தந்தையாக இருந்தாலே பெரிய விடயம். எனது கல்விப் பயணம் புளியவத்தை TMV யில் இருந்து மீண்டும் தொடங்கியது, இப்போது நான் எனது கனவிலும் நினைத்திராத ஒரு இடத்தில் இருக்கிறேன் என்பதே உண்மை.

பிள்ளைகளுக்கு இந்த புலமைப்பரிசில் பரீட்சையின் மூலம் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மிகவும் கடினமான சுமையை கொடுக்கிறார்கள். புலமைப்பரிசில் பரீட்சை ஒரு சிறந்த வியாபாரமாகவும் மாறிவிட்டது. உண்மையில், குழந்தைகள் இன்னும் இந்த சுமையை புரிந்து கொள்ளும் அளவு முதிர்ச்சி அடையவில்லை. எனவே, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் பிள்ளைகளுக்கு அதிக அழுத்தம் கொடுக்க வேண்டாம் என பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைகளுக்கு நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பிள்ளை சித்தி அடைந்தாலும் அல்லது தோல்வியடைந்தாலும், கல்வியின் பெறுமதியை பற்றிய அவர்களின் புரிதல் காலப்போக்கில் தெரிய ஆரம்பிக்கும். கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள உதவும் சூழலை அவர்களுக்கு உருவாக்குங்கள். பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியவர்கள் மற்றும் பிறருக்கு மரியாதை கொடுப்பதன் முக்கியத்துவத்தை அவர்களுக்கு சொல்லிக்கொடுங்கள், ஏனெனில் இந்த பண்புகள் அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் கல்விக்கு மிக முக்கிய பங்களிக்கும்.

**முனைவர் பொறியியலாளர் நவா நவரட்ணராஜா,**
**முதுநிலை விரிவுரையாளர்,**
**பொறியியற் பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**முகப்புத்தில் படித்தது**

# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில்
## உத்தியோகத்தர்களுக்கு புதிய சீருடை அறிமுக நிகழ்வு





**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் அலுவலக உத்தியோகத்தர்களுக்கான புதிய சீருடை அறிமுக நிகழ்வு பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி தலைமையில் (20) நடைபெற்றது.

புதிய சீருடை அறிமுக நிகழ்வின் போது, பிரதேச செயலாளர் தேசியக்கொடியை ஏற்றி வைத்து அலுவலக உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாற்றினார். பிரதேச செயலாளர் தனது உரையில், அலுவலக கடமைகள் தொடர்பிலும் பொதுமக்களுக்கு அரச சேவையாளர்கள் மேற்கொள்ள வேண்டிய சேவைகள் தொடர்பிலும் விளக்கமளித்தார். அலுவலக உத்தியோகத்தர்களின் கடமை மற்றும் பொறுப்புகள் தொடர்பில் உத்தியோகத்தர்கள் கூட்டுப் பொறுப்புடன் செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் இங்கு வலியுறுத்தினார்.

பொதுமக்கள் தினத்தில் அலுவலகத்தில் அனைவரும் இன்று அறிமுகமாகி இருக்கும் இந்த சீருடையை தொடர்ச்சியாக அணிந்து வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், கணக்காளர் கே.எம்.றிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா, நிர்வாக உத்தியோகத்தர் கே. யோகேஸ்வரன், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் எஸ்.சிவம், கிராம சேவையாளர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் இந்திரஜித், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் உட்பட திணைக்களங்களின் கீழ் பணியாற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் என பலர் இதில் கலந்து கொண்டனர்



## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 36

# சிலம்படிக் கலையில் சிகரம் தொட்ட ஆளுமையின் சாதனைப் பயணம்

# அமரர்.கலாபூணம் செல்வராசா சுகுணசேகரம்

கலைகள் என்பது காலத்தை எதிரொலிக்கும் கண்ணாடியாகத் திகழ்கின்றது. இவை ஒரு நாட்டின் பாரம்பரிய கலாசார பண்பாட்டினை தெள்ளத் தெளிவாகக் காட்டுவதற்கு உதவுகின்றன. அவ்வாறான பாரம்பரியமிக்க கலைகளுள் சிலம்படிக் கலையும் ஒன்றாகத் திகழ்கிறது. சிலம்பம் என்ற பெயர் சிலம்பு என்ற வார்த்தையில் இருந்து உருவானது. சிலம்பு என்பதற்கு ஒலித்தல் என்று பொருள். சிலம்பம் ஆடும் போது உருவாகும் ஒலிகளை குறிக்கும் விதமாக சிலம்பம் என்ற பெயர் சூட்டப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. அக்காலத்து மக்கள் விலங்குகளிடம் இருந்து தம்மை காத்துக் கொள்ள சிலம்படிக் கலையை பயன்படுத்தினர்.



தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்த காலத்தில் முதலில் எடுத்தது கம்பு எனப்படும் ஆயுதமே ஆகும். இதுவே பின்னர் சிலம்படிக் கலையாக வளர்ச்சி பெற்றது. சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல், எதிராளியின் உடலில் சிலம்புக் கம்பினால் தொடுதல் போன்றன அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. தற்காலத்தில் இக்கலையினை கிராம, நகர்ப் புறங்களில் ஆண்கள், பெண்கள் என்று இருபாலரும் கற்று வருகின்றனர். இவ்வாறான கலை திருகோணமலையின் மூதூர் பிரதேசத்தில் பரவலாக பரவியிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக கட்டைபறிச்சான், சம்பூர், சேனையூர் பகுதிகளில் சிலம்படிக் கலையுடன் தொடர்புபட்டவர்கள் அதிகமானோர்.

அவ்வகையில், மூதூர் கட்டைபறிச்சானை பிறப்பிடமாகவும்,.வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தவரும், தனது 27ஆவது வயதிலிருந்து 42வருடங்களாக சிலம்படிக் கலையில் ஈடுபட்டு வந்தவரும், 2014இல் கலாபூஷணம் அரச விருதை பெற்றுக் கொண்டவருமான சிலம்படிக் கலையின் மூத்த ஆளுமை செல்வராசா சுகுணசேகரம் கலைஞரின் சாதனைப் பயணம் பற்றிய தொகுப்பு இங்கு எமது சுபீட்சம் வாசகர்களுக்காக......

மூதூர் பிரதேசத்தின் கட்டைபறிச்சான் 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வராசா சிவகாமிப்பிள்ளை தம்பதிகளுக்கு மகனாக 1946இல் பிறந்தவர் கலைஞர் சுகுணசேகரம். இவருடைய மனைவி கமலநாயகி. இவருக்கு 3 ஆண் பிள்ளைகள்.

கலைஞருடைய பரம்பரையில் அனைவரும் கலையுடன் தொடர்புபட்டவர்கள். இவரது தந்தை கால்நடைகளுக்கான நாட்டு வைத்தியராகவும்,



தமிழரின் தற்காப்பு கலையில் வல்லுநராகவும் வாழ்ந்தவர். ஆரம்பக் கல்வியுடன் தனது கல்வியை நிறுத்திக் கொண்ட இவர் விவசாயத்திலும், வீட்டுத் தோட்டத்திலும் ஈடுபட்டு வந்தவர். கலைப் பரம்பரையில் தொடர்புபட்டதால் என்னவோ தனது தந்தையைக் குருவாகக் கொண்டு கை விளையாட்டில் (கராத்தே) 16 வகையானவற்றை முறைப்படி கற்றுக் கொண்டார். அதன் பின்னர் சிலம்படிக் கலையில் ஏற்பட்ட ஆர்வத்தினால் இவரின் தந்தையின் மூலமாக இந்தியாவை பூர்விகமாகக் கொண்டவரும், திருமணமாகி கட்டைபறிச்சானில் வசித்து வந்தவருமான நாகையா அவர்களிடம் சிலம்படிக் கலையினை முறைப்படி முழுமையாக மூன்று வருடங்கள் கற்று அரங்கேற்றம் செய்தார்.

சிலம்படிக் கலையினை அதிகமாக கோவில் திருவிழாக்களிலும், கலை நிகழ்வுகளிலும் முன்னெடுத்து வந்தார். இதன் மூலமாக தான் வாழும் இடத்தில் இக் கலை மூலமான அடையாளத்தை சிறப்பாகப் பெற்று சமூகத்தின் மத்தியில் தனி வரவேற்பைப் பெற்று புகழாரத்துடன் வாழ்ந்து வந்தவராவார்.

தான் கற்ற இக் கலையை மற்றவர்களிடமும் வளர்க்க முயற்சிப்பவனே கலைஞன் என்ற வகையில் தான் பயின்ற இக் கலையினை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்க விரும்பி ஆரம்பத்தில் 2பேருக்கும், அதன்பின் 4பேருக்கும் என தொடர்ந்து சென்று 50ற்கும் மேற்பட்டவர்களுக்கு தனது வீட்டு முற்றத்தின் சூழலிலே கற்றுக் கொடுத்து வந்தார். தன்னிடம் ஆர்வம் கொண்டு கற்கவரும் ஒவ்வொரு பிள்ளையிலும் தனித் தனி கவனிப்பினையெடுத்து அவர்களின் திறமைக்கேற்ற விதத்தில் ஒரு குருவாக கற்றுக் கொடுத்து வந்த அதே வேளையில் தனது மாணவர்களுடன் இணைந்த கலையரங்க வெளிப்பாடுகளை பலமுறை மிகைவாக கோயிற் திருவிழாக்களில் மேடையேற்றி இருந்தார் என்பதுடன் கற்க வந்த அனைவருக்கும் இலவசமாக பயிற்சியளித்து வந்தார் என்பதும் பதிவுக்குரிய விடயமாகும்.

இவ்வாறாக சிலம்படிக் கலையை கற்கும் போது இருந்த ஆர்வத்திலும் பலமடங்கு அக்கலையை பயிற்றுவிக்கும் போது ஆர்வமாக இருந்தார். தமிழரின் பாரம்பரிய கலையான சிலம்படிக் கலையை கட்டிக் காத்து வளர்த்து விட வேண்டுமென்ற பொறுப்பில் பல காத்திரமான செயற்பாடுகளை இக் கலை மூலமாக மூதூர் பிரதேசமெங்கும் முன்னெடுத்து வந்த





இக் கலைஞரின் சேவையைப் பாராட்டி 2014 ஆம் ஆண்டு அரச விருதான கலாபூஷணம் விருதைப் பெற்றார். சிலம்படிக் கலைக்காக கிழக்கு மாகாணத்தில் கலாபூஷணம் விருதுப் பெற்ற முதலாவது கலைஞர் இவர் என்பது சிறப்புக்குரிய விடயமாகும்.

சிரித்த முகத்தோடும், கம்பீரமான நடையோடு, தலைக்கனம் இல்லாது அனைவரிடனும் அன்பாகப் பேசிப் பழகும் இவர் சிலம்பம் விளையாட்டில் மட்டும் கைதேர்ந்தவராக நின்றுவிடாமல் கால்நடைகளுக்கான நாட்டு வைத்தியராகவும் சிறந்து விளங்கினார். தனது தந்தையைப் போன்று இத்துறையிலும் வல்லுநராக காணப்பட்டதோடு இப்பணியையும் தந்தையைப் போல இலவசமான சேவையாக மேற்கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தமிழர்களின் பாரம்பரிய கலைகளுள் ஒன்றான சிலம்பக் கலையை அழிவடையாமல், அவற்றைப் பாதுகாத்து வலுச் சேர்ப்பதோடு தொடர்ந்து அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சேர்க்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பில் வாழ்ந்த இக் கலைஞர் தனக்குப் பின் சிலம்படிக் கலை மறைந்து விடக்கூடாதென்ற எண்ணத்தில் இவரின் மகனான உமாசங்கர் என்பவருக்கு கற்றுக் கொடுத்துள்ளார்.

சிலம்பம் கலை மூலமாக தான் வாழ்ந்த மண்ணுக்கு பெருமை சேர்த்ததோடு மட்டுமல்லாமல் சமூகத்தின் மத்தியில் இக் கலைக்கான தனித்துவ இடத்தை பெற்று வாழ்ந்து வந்த இவ் முது கலைஞர் 03/11/2015 அன்று மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சென்றமை எம் மண்ணுக்கே உண்டான பாரிய இழப்பாகும். இவர் மண்ணை விட்டு சென்றாலும் இவருக்கான வரலாற்று அடையாளம் இன்று வரையில் சமூகத்தின் மத்தியில் பேசப்பட்டு வருகின்ற அதேநேரம் இவரின் கலையை அவரது மகன் உமாசங்கர் தொடர்ந்து கொண்டு செல்கின்றமை மிகவும் காத்திரமான செயற்பாடாகும்.

இவ்வாறாக சிலம்பம் கலை மூலமாக நம் பாரம்பரிய அடையாளங்களை பேணி பாதுகாத்து வந்ததோடு அதனை பலருக்கும் கற்றுக் கொடுத்து அவர்கள் மூலமாக சிலம்பம் கலையில் இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கும் இவர் எம் மண்ணின் என்றுமே போற்றுதலுக்குரிய கலைஞராவார்.

கலைகளை ஆத்மார்த்தமாக நேசித்து கலைச் சேவையினை ஆற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்களை மட்டுமல்ல வாழ்ந்த கலைஞர்களையும் போற்றி நினைவு கூற வேண்டிய கடமை யாவர்க்குமானதாகும்.

நன்றி!

குறிப்பு:- இக் கலைஞர் பற்றிய தொகுப்புக்கான தகவலை அவரது மகனிடமிருந்தும் (உமாசங்கர்) , கலைஞரின் நினைவுமலர் தொகுப்பில் இருந்தும், கலைஞர் பற்றிய எனது ஆரம்பகால நேர்காணல் தொகுப்பிலிருந்தும் பெறப்பட்ட தகவலிருந்து தொகுக்கப்பட்டதாகும்.

**தொடரும்.......**
**கலைஞர்களுக்கான**
**தேடலின் பயணத்தோடு**

**திருமலை தட்சாயினி**
**ஞானசங்கரன்.**






சுபீட்சம்
மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

# பாலம் பழுதடைந்து பதினைந்து வருடங்கள் கடந்தும் புதிய பாலம் புனரமைக்கப்படவில்லை



## குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்து இரண்டு வருட பூர்த்தி நவம்பர் 23

ஏ.ஆர் எம் றிபாஸ்
கிண்ணியா நிருபர்

கிண்ணியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட குறிஞ்சாக்கேணி பாலமானது 1974 ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் அவர்களின் தந்தை மஜீத் எம்.பி (ஆக)அவர்களின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது

இப்பாலம் சுமார் 50 வருடங்கள் பழமை வாய்ந்த பாலமாகும் இப்பாலமானது 15 வருடங்களுக்கு மேலாக பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது

கிண்ணியாவின் மத்திய புள்ளியில் அமைய பெற்ற இப் பாலம் கிண்ணியா நகரசபையையும் இ கிண்ணியா பிரதேச சபையையும் பிரிக்கின்ற எல்லையாகவும் இயற்கை அழகு நிறைந்த மனதை கவரும் பாலமாக காணப்படுகின்றது

இப்பாலத்தினூடாக நாளாந்தம் 2000 மேற்பட்ட பொதுமக்கள் பிரயாணம் செய்கின்றனர் பாடசாலை மாணவர்கள் இ ஆசிரியர்கள் இ அரச ஊழியர்கள் இ வியாபாரிகள்இ நோயளர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் என பலர் இப்பாலத்தையே பிரதான வீதியாக பயன்படுத்தி வருகின்றனர்

இப்பாலத்தினை அமைத்துத்தருமாறு திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர்களிடம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவைகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் பொது மக்களினால் இப்பாலத்தை அமைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது அந்த வகையில் பாலத்தை அமைத்துத் தரக் கோரி வீதியை மறித்து ஆர்பாட்டங்களில் ஈடுபட்டனர் இவ்விடயம் தேசிய ரீதியில் பேசப்பட்டது. அதேவேளை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிரிசேனா அவரின் ஆட்சிக்காலத்தில் இதற்கான நடவடிக்கை எடுப்பதாக கூறிய போது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை மேலும் தபால்அலுவலகங்கள் ஊடாக 10000 பதிவுக் கடிதங்கள் ஜனாதிபதிக்கு சமூக மட்ட அமைப்புக்களினால் அனுப்பி வைக்கப்பட்டது

இலத்திரணியல் இ அச்சு ஊடகங்களில் பாலத்தின் குறைகளையும்இ மக்கள் பாலத்திதினூடா பிரயாணம் செய்கின்றபோது எதிர்நோக்கப்படுகின்ற அசௌகரியங்கள் கஷ்டங்கள்இ விபத்துகள்இ பாலம் உடைந்து கிடக்கின்ற அபாய நிலை இ பாலம் ஆற்றினுள் விழுந்துள்ள பகுதிகளை எடுத்துதுக்காட்டப்பட்டது இவ்வாறு மக்களினால் மேற்கொகொள்ளப்பட்டு வந்த எந்த நடவடிக்கைகளும் சாத்தியமாகத நிலையில்

பால நிர்மாண நடவடிக்கைக்காக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஃறூப் அவர்களின் தலைமையில் முன்னாள் பிரதம



ரும் தற்போதைய இலங்கையின் நிறைவேற்று அதிகாராம் கொண்ட எட்டாவது

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களினால் அடிக்கல் நடும் வைபவம் 2019. 07.14 திகதி இடம் பெற்றது

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக்இ இம்ரான் மஹ்ரூப் உட்பட உள்ளூராட்சி மன்ற தலைவர்கள்இ உறுப்பினர்கள் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டார்கள்.

750 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுளதாகவும் இக் கடல் மேல் பாலமானது வீதி அபிவிருத்தி மற்றும் நெடுஞ்சாலைகள் பெற்றெலிய வள அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் எந்தவித கட்டுமான வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை

இவ்வாறு ஒன்றரை வருடங்களுக்கு பின்னர் மீண்டும் புதிய அரசாங்கத்தின் ஊடா 2021.04.10 திகதி அப்போதைய கிராமிய வீதிகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா பாராளுமன்ற உறுப்பினர் காபில நுவான் அத்துக் கொரல இ பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் இஅநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஸாக் ரஹ்மான் ஆகியோரினால் அடிக்கல் நடப்பட்டன.

பால நிர்மாண பணிகளுக்காக வீதியானது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 திகதி கிண்ணியா பிரதேச செய



லாளர் முகம்மது கனியின் அறிவுருத்தலுடன் மூடப்பட்டது மக்கள் பிரயாணம் செய்வது தடை என்ற பதாதையும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது பால நிர்மாண கட்டுமான வேலையினை தனியார் கம்பனி பொறுப்பெடுத்து புனர்நிமாண வேலைகளை ஆரம்பித்து ஓரிரு மாதங்கள் பணிகள் நடைபெற்றிருந்த போது சில காலங்கள் ஒருசில காரணங்களுக்காக புனர்நிர்மாண பணிகள் இடைநிருத்தப்பட்டிருந்தது குறிப்பாக கட்டுமான பொருட்களின் விலையேற்றம் உதாரணமாக சீமெந்து இஇரும்புக் கம்பி போன்றவைகள்

பால கட்டுமான பணிகள் இடைநிருத்தப்பட்டது தொடர்பாக சமூக ஆர்வளர்கள் சமூக ஊடகங்களில் பல் தரப்பட்ட கேள்விகளையும் விமர்சனங்களையும் எழுதினர் இவற்றுக்கான பதிலாக பாலத்தின் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதாக கூறப்பட்டு வந்தது

பால நிர்மாண வேலையின் போது மக்கள் போக்குவரத்துக்காக எந்தவித தற்காலிக பாவமும் அமைக்கப்படவில்லை இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பல் வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகிவந்தனர் குறிப்பாக பாலத்துக்கு அண்மையில் குடியிருக்கும் மக்கள் கிண்ணியா நகரத்துக்கு பொருட்கள் வழங்குவதற்காக அல்லது தேவைக்காக செல்வதாக இருந்தால் நான்கு இஐந்து கிலோமீட்டர் சுத்திச் செல்லவேண்டியேற்பட்டது இதனால் கால இநேரங்களில் தாமதம்இ செலவினங்கள் அதிகரித்தது இது தொடர்பாக அதிகாரிகளித்தில் சுட்டிக்காட்டி இதற்கான தீர்வாக சில தீர்வுத்திட்டங்களும் முன்மொழிந்தனர்

### பதில் பாதைக்கு பதிலாக படகு போக்குவரத்து சேவை

பொதுமக்கள் போக்குவரத்தை இலகு படுத்துவதற்காக பிரதேச செயலாளர் முகம்மது கனி தலைமையில் கிண்ணியா நகரசபை இகிண்ணியா பிரதேச சபை தவிசாளர்களுடனான மற்றும் சமூக மட்ட தலைவர்களுடன் ஆலோசனை கூட்டம் நடாத்தப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது

அந்த வகையில் கிண்ணியா நகரசபை பிரதேச சபை ஒத்துழைப்புடன் தனிநபர் உதவியுடன் படகுப் பாதை போக்குவரத்தை ஆரம்பித்தனர் ஆரம்பத்தில் இழுவை மூலமாக பிரயாணிகள் ஏற்றி இஇறக்கினர் இதற்காக கட்டணங்கள் அரவிடப்பட்டன சைக்கிள்களில் செல்பவர்களிடம் 20ரூபாய்இமோட்டார் சைக்கிளில் செல்பவர்களிடம் 30ரூபாய் மற்றும் ஆட்டோக்களில் செல்பவர்களிடம் 50ரூபாய் என கட்டணம் அரவிடப்பட்டன பாடசாலை மாணவர்கள் இ காலை மாலை நேரத்தில் டியூசன் செல்லும் மாணவர்கள் இ எந்தவித வாகனங்களின்றி பயணம் செய்யும் பொதுமக்களிடம் எந்த கொடுப்பனவுகளும் அரவிடப்படவில்லை

படகுப் பாதை போக்குவரத்துக்காக கட்டணங்கள் அரவிடப்பட்டாளும் இது மக்களுக்கு செய்கின்ற சேவையாகவே பார்க்கப்பட்டது ஒவ்வொரு நாளும் காலை 6.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரை படகு சேவையை நடாத்திவந்தனர் பெருநாள் இ விஷேட தினங்களில் இரவு 11.00இ 12.00 மணி வரையும் நடத்தினர் ஆரம்பத்தில் ஒரேயொரு மனித இழுவைப் படகுப் பாதையே போக்குவரத்துக்காக பயன்படுத்தப்பட்டது. இதனை உரிமையாளரின் முயற்சியால் மின் மோட்டார் பொருத்தப்பட்டு மின் சக்தி மூலம் இழுத்து ஏற்றிஇஇறக்கப்பட்டது இது இலங்கையில் பேசும் பொருளாக பேசப்பட்டு வந்தது சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்தது

மக்கள் போக்குவரத்து அதிகாரித்துக் காணப்பட்டது ஆனால பட குப் பாதையில் பயணம் செய்யக்கூடியவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது இதனால் இன்னொரு இயந்திர படகுப் பாதை போக்குவரத்துக்காக தயாரித்து பயன்படுத்தப்பட்டது இவ்விரு படகுப் பாதை மூலம் மக்கள் போக்குவரத்து இலகு படுத்தப்பட்டாலும் மக்களுக்கு பயணத்தில் திருப்தியாக இருக்கவில்லை எப்போது என்ன நடக்கும் என்ற பீதியுடன்இஅச்சத்துடன் பயணம் செய்து வந்தனர்

### படகுப் பாதை விபத்தும் பலரின் பரிதாபமும்

பல மாதங்களாக பயணத்துக்கு படகுப் பாதையை பயன்படுத்துவதால் பலர் படகுப் பாதைக்கு பழக்கமாகிவிட்டனர் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள்இஅரச உத்தியோகத்தர் இ ஆட்டோக்காரர்கள் மற்றும் வியாபாரிகள் என பல்வேறுபட்டவர்களைக் குறிப்பிடலாம்

கிண்ணியாவில் இதற்கு முன்னர் கூட இயந்திர பாதை பயன்படுத்தப்பட்டது இதனை யாராலும் மறக்கவும் முடியாது மறைக்கவும் முடியாது ஏனனென்றால் இலங்கையின் மிக நீளமான பாலம் அமைப்பதற்கு முன்பு இயந்திர பாதை பயன்படுத்தப்பட்டது அத்துடன் கிண்ணியாவிலிருந்து மூதூருக்கிடையில் மூன்று பாலங்கள் உள்ளது அவை அமைப்பதற்கு முன்பும் படகுப் பாதை பயணத்தையே தொடர்ந்தனர்

அன்றுதொட்டு இன்றுவரைக்கும் படகுப் பாதைப் போக்குவரத்து பயன்படுத்தப்பட்டு வந்ததால் குறிஞ்சாக்கேணி பாலம் அமைப்பதைப்பற்றிய எண்ணம் கூட பலரிடத்திலிருந்து பறிபோனது பாலம் அமைத்தால் பார்போம் என்று எண்ணும் அளவுக்கு ஏமாற்றம்

2021.நவம்பர். 21 என்ற ஒரு நாள் காலையில் 'பாடசாலை மாணவர்கள் பள்ளி சென்ற படகுப் பாதை விபத்துக்குள்ளானது' என்ற செய்தி ஊரெங்கும் ஓங்கி ஒலிகத்தது. பதினைந்து நிமிடங்கள் ஆகவில்லையே பாராளுமன்றத்தில் 'பரிதாபகரமான பாதை விபத்து பலர் பலியானார்கள்' என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃறூப் உரையாற்றினார்



பாதை விபத்துக்குள்ளானவர்களை காப்பாற்ற பலரும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்கள் முடிந்தவரை மூச்சி நிற்பதற்குள் காப்பாற்ற வேண்டும் என கடலில்லிறங்கி தேடுதல்வேட்டையில் ஈடுபட்டனர் கடற்படையினர் களத்தில் நின்றனர் காப்பாற்ற முடிந்தது கணிசமான அளவினர்

பலர் ஒன்று சேர்ந்து பாதைகளை மறித்து டயர்களுக்கு தீ வைத்தனர் பிரதேச செயலகத்திற்கு சென்று பிரதேச செயலகத்தை முற்றுகை இட்டனர் அத்தோடு பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் அவரின் வீட்டுக்கு சென்று வீரச்செயல்களில் ஈடுபட்டு அடித்துடைத்தனர் அனர்த்தத்தில் அன்று மட்டுமே ஆறு உயிர்கள் பலி கொடுக்கப்பட்டது பலர் வைத்திய சாலை அதிதீவர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர் பள்ளி சென்ற பாலகர்களின் பரிதாபகரமான பேச்சு பார்ப்பவர்களுக்கு பரிதாபத்தை ஏற்படுத்தியது நாட்டில் பேசப்பட்டது மட்டுமல்லாமல் உலக நாடுகள் பலவற்றில் பரிதாபம் பேசப்பட்டது

பாடகுப்பாதை கவிழ்ந்ததில் பழியானவர்களின் எண்ணிக்கை எட்டாக அதிகரித்தது இதற்கு காரணம்



சிகிச்சை பயனளிக்கவில்லை விபரம் பின்வருமாறு

| பெயர் | பால் | வயது |
| --- | --- | --- |
| அப்துல் மஜீத் சேகப்துல் காதர் | ஆண் | 70 |
| பாலசூந்தரம் சப்ரினா | பெண் | 33 |
| சதாத் சௌகீத் | ஆண் | 03 |
| நுபாஸ் பாத்திமா சிறீன் | பெண் | 08 |
| நுபாஸ் சஹ்லா | பெண் | 06 |
| பாரீஸ்தீன் முகம்மது பகீத் | ஆண் | 06 |
| ரபீஸ் பாத்திமா நபா | பெண் | 06 |
| எஸ்.ஹாலிஸா | பெண் | |

அனர்தம் நடந்து ஒன்பது மாதம் ஒரு வருடத்துக்குள் முளக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது ஆனால்; இதே மாதம் நவம்பர் 23ஆம் திகதியுடன் இரண்டு வருடம் பூர்த்தியடைகின்றது இன்னும் பாலம் அமைக்கப்படும் என்று செல்லிச் சொல்லி பல வருடங்கள் கழிந்துத போல் காலம் கடந்து செல்கின்றது 2021ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி ஏற்பற்பட்ட விபத்து போன்று இன்னுமொன்று நடப்பதற்கு முன்னர் புதிய பாலம் அமைக்கப்படவேண்டும்

தற்போது பாலத்தினை மினவர்கள் இறால் பிடிக்கும் இடமாக பயன்படுத்தி வருகின்றனர் இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் இதனை யார் சரி செய்வது சில நேரங்களில் பார ஊருதிகளை இதுனூடாக கொண்டு செல்கின்றனர் பாலத்தின் பாதிப்பகுதி எந்தவித தொடர்பும் அற்று அரிப்புக்குள்ளாகியுள்ளது அவதானம் என்ற எச்சரிக்கை பலகை போடப்பட்டிருந்தாலும் பொறுட்படுத்தாமல் பொதுமக்கள் பயணிக்கின்றனர் இதற்கு பொறுப்பான அதிகாரிகளே பொறுப்புக் கூறவேண்டும்.

அண்மையில் கூட அரபு நாட்டின் நிதியுதவியுடன் கைவிடப்பட்டுள்ள கிண்ணியாஇ குறிஞ்சாக்கேணி பால நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தேவையான நிதியினை சவூதி நிதியத்தின் கடனுதவியில் இருந்து பெறுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் ஊடகங்கள் வாய்லாக தெரிவித்தன.

இது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு கடந்த 25ஆம் திகதி திங்கட்கிழமை சவூதி நிதியத்தினால் நிதி அமைச்சின் கீழுள்ள வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமையஇ பதுளை - செங்கலடி வீதியின் நிர்மணத்திற்காக சவூதி நிதியத்தினால் வழங்கப்பட்ட கடனுதவியில் மிகுதியாகவுள்ள 10.5 மில்லியன் அமெரிக்க டொலரினை குறிஞ்சாக்கேணி பால நிர்மாணப் பணிக்கு பயன்படுத்த சவூதி நிதியம் அனுமதி வழங்கியுள்ளது.

குறித்தி நிதியினை பயன்படுத்துவதற்கான அனுமதியினை கோரி கடந்த ஜுன் 21ஆம் திகதி வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கோரிக்கை கடிதமொன்றினை சவூதி நிதியத்திற்கு அனுப்பியிருந்தார்.

சவூதி நிதியத்தின் அனுமதியினை உத்தியோகபூர்வமாக பெறுவதற்காக இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் - கஹ்டானிஇ திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எம்.எம்.பீ.கே. மயாதுன்ன ஆகியோர் பல்வேறு முயற்சிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்தருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பாலம் எப்போது அமைக்கப்படும் என்ற கேள்விகளுடனும்இ எதிர்பார்ப்புகளுடன் இருக்கின்றனர் சம்பந் பட்ட மக்கள் பிரதிநிதிகள் இதற்கு எப்போது தீர்வினை பெற்றுக் கொடுப்பார்கள் என்ற பல்வேறு கேள்விகளுடன் இதற்கான தீர்வு எப்போது கிட்டும் எதிர்பார்ப்புடன் கிண்ணியா வாழ் மக்கள் காத்திருக்கின்றனர் அதே போன்று நானும் இப்பாலத்தின் குறைகளை எழுதுவதை நிறுத்துவது என்ற எதிர்பார்புடன் காத்திருக்கிறேன்.


MALAYSIAN UNIVERSAL COLLEGE
MALAYSIAN UNIVERSAL COLLEGE
Proudly Present
4 STYLE
BRIDAL DRESSING
ONE DAY WORK SHOP 2024
11TH YEAR ANNIVERSARY PROMOTION
Western Bridal Look
Special Guest & Model of the workshop
Roshalie Jayawardane
Actres / Model
Muslim Bridal Look
Special Guest & Model of the workshop
Ishanka Abeysekara
Actres / Model
Hindu Bridal Look
Special Guest & Model of the workshop
Sachini Roy
Actres / Model
Kandyan Bridal Look
Special Guest & Model of the workshop
Viana Fernando
Actres / Model
Senior Trainer
Inosha Sandamali
(NVQ 4,5,6) Qualified
Tamil & Sinhala
Fees
RS 3000
Two International certificate will be awarded
At the End motivational speech About the tips
Business Ideas shared for Makeup look
Four Makeup look
13TH JANUARY 2024
10.00 am to 04.30pm
At BMICH Hall
SAFRAS OPTICALS
ZARA BRIDALS
Contact us
+94 72 353 8773
+94 77 085 7994

# இளம் வயதில் பல துறைசார் பணிகளில் தடம்பதித்த

# உளவியல் ஆலோசகர் நுபைா நஷீர்

(பாறுக் ஷிஹான்)

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூரை பிறப்பிடமாக கொண்ட அலியார் நஷீர் மற்றும் பாத்திமா பஷீனா தம்பதியினருக்குப் பிறந்த புதல்வி நுஷைபா நஷீர் ஆவார். இவரது தந்தை கல்முனை சணச அபிவிருத்தி வங்கியில் கணக்காளராக பணிபுரிகிறார். இவரது தாய் வீட்டு மனையாளாக இருக்கிறார். இவருக்கு இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.

இவர் தரம் 01இல் இருந்து உயர்தரம் வரையிலான கல்வியை கமு/கமு/அல் மஷ்ஹர் தேசிய பாடசாலையில் கல்வி கற்றார். அப்பாடசாலையில் உயர் தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்று வந்தார்.

இவர் பாடசாலை காலத்தில் பாடசாலையில் முதலுதவி, சுற்றாடல் கழகம், இசை வாத்திய குழு, சுகாதார கழகம், மாணவர் பாராளுமன்றம் அதிலும் கூடிய வாக்குகளை பெற்று பாடசாலையில் தெரிவு செய்யப்பட்டமையும் பாடசாலையில் சுற்றாடல் அமைச்சராக தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். மேலும் சுற்றாடல் கழகத்தில் முன்னோடி பதக்கம், மஞ்சள் வர்ணப் பதக்கம், பச்சை வர்ணப் பதக்கம், வெள்ளி வர்ணப் பதக்கம், தங்க வர்ணப் பதக்கம், ஜனாதிபதிப் பதக்கம் என பதக்கங்களை பெற்றுக் கொண்டுள்ளார். தமிழ் தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி மற்றும் சிங்கள தின போட்டி என அனைத்திலும் பங்கு கொண்டுள்ளார். வகுப்புத் தலைவராகவும் அனைத்திலும் இணைந்து செயற்பட்டுள்ளார்.

இவர் உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைகழகம் தெரிவாகியும் கூட சில சூழ்நிலை காரணமாக பல்கலைகழகம் செல்லமுடியாமல் போயிற்று. எனினும் முயற்சியைக் கைவிடாது தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனத்தில் சமூக சேவையில் கலைமாணி பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றார். வெளிவாரியாக படித்துக் கொண்டிருக்கின்றார். இவர் Diploma in counselling psychology, Diploma in English, Diploma in



Sinhala, Diploma in human resource management, pre metrial counselling, child psychology போன்ற கற்கை நெறிகளை பூர்த்தி செய்துள்ளார் மற்றும் அதனோடு மார்க்கக் கல்வியினையும் பூர்த்தி செய்துள்ளார். மேலும் beauty culture and henna course இனையும் பூர்த்தி செய்துள்ளார். தற்போது சட்டத்துறையில் uk university இல் படித்து வருவதோடு b.ed Iயும் இலங்கை கல்லூரி ஒன்றிலும் செய்து வருகின்றார். சமூக விஞ்ஞானிகள் சங்க ஆராய்ச்சியாளராக செயற்பட்டு வருகின்றார்.

இவர் பொழுதுபோக்காக புத்தகங்களை விரும்பிப் படிப்பார். அதுவே இலக்கிய துறையில் இவரை காலடி எடுத்து வைக்க காரணமாயிற்று. எனவேஇவர் ஒரு எழுத்தாளராகவும் கவிதாயினியாகவும் காணப்படுகின்றார். சிகரம் சஞ்சிகை ஆசிரியர் குழுவிலும் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையில் உறுப்பினராகவும் பத்திரிகையாளராகவும் (journalist) பணிபுரிந்து வருகின்றார். Story telling மற்றும் short film maker ஆகவும் காணப்படுகிறார்.motivational speaker என்பதும் குறிப்பிடத்தக்கது.தற்போது ஸ்ரீ லங்கா பென் கிளப், தூரிகை முற்றம் அம்பாறை மாவட்ட கலைஞர்கள் என பல எழுத்தாளர்கள் குழுவிலும் பல கவிதை குழுமங்களிலும் ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றார். சிறந்த கவிதை எழுதுவதனால் கவிச்சிகரம் என்ற புனைப்பெயர் இவருக்கு சூட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது





ஊடகத்துறையிலும் இவரது பயணம் வியாபித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஸ்கை தமிழ் மீடியாவில் பத்திரிகையாளராகவும் guru tv இல் மாவட்ட ஒருங்கிணைப்பாளராகவும் முத்தூறல் மற்றும் சிலோன் நிவ்ஸ் இல் வானொலி நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் k k media இல் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் LACSDO மீடியா உறுப்பினராகவும் செயற்பட்டு வருகிறார்.

இவர் edu free academy யில் நிர்வாக உறுப்பினராக கல்விக்கான செயற்திட்டத்தில் பங்கு கொண்டு செயற்பட்டுள்ளார். பாடசாலை மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு, வினாத்தாள் விநியோக பணிகளில் ஈடுபட்டு செயற்பட்டுள்ளார். Institute for free education CÀ volunteer ஆக செயற்பட்டுள்ளார். மேலும் Eclat unites இல் எழுத்துத் துறையில் பயணித்துள்ளார். அதுமட்டுமல்லாது Eclat units உடன் இணைந்து உயர்தரம் மற்றும் சாதாரணதர மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கை நடாத்தியுள்ளார். இதில் grow green செயற்திட்ட ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

இவர் சமூகத்தில் ஒரு முன்மாதிரியான சமுக ஆர்வலராகவும் பயணித்துக் கொண்டிருக்கின்றார். இவரது முதல் இளைஞர் கழகத்துடனான பயணம் ycli அதாவது youth community leadership initative உடன் ஆரம்பமானது எனக் குறிப்பிடுகின்றார். பின்னர் CPBR (central for peace building and Reconcillation), undp (United nations development programs) hekadav, family planning assosiation அதிலும் கிழக்கு மாகாணத்தில் mojo fellowship இலும் பணிபுரிந்து சமூகத்தில் உள்ள பெண்கள் சார்ந்த பிரச்சினைகளை குறும்படம் மூலம் வெளிக் கொண்டு வந்துள்ளார் என்பது சிறப்பான விடயமாகும்.

இவரது துறைசார் பணிகள் எண்ணிலடங்காதவை என்றே குறிப்பிடலாம். அவையாவன, இவர் Human rights organization இலும் ஒரு அங்கத்தவராகவும் பணியாற்றி வருகின்றார். Eastern youths organization



இல் அம்பாறை மாவட்ட உதவி செயலாளராக கடமையாற்றுகின்றார். Human development association இல் நிந்தவூர் அமைப்பாளராக பணியாற்றுகின்றார். green east இன் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பாளராக செயற்படுகின்றார். women lioness அமைப்பினுடைய நிறுவனராகவும் இருக்கின்றார். Mission green இனுடைய volunteer ஆகவும் செயற்படுகின்றார். சர்வோதய மனோஹரி நிகழ்ச்சித் திட்ட TOT ஆகவும் செயற்படுகின்றார். Srilanka youth alliance இனுடைய உறுப்பினராகவும் செயற்படுகின்றார். Iconic youths srilanka இனுடைய நிந்தவூர் இணைப்பாளராக செயற்படுகின்றார். women in managment srilanka Cß new genaration இனுடைய அங்கத்தவராகவும் பல செயற்திட்டங்களிலும் செயற்படுகின்றார். unity mission trust இல் அங்கத்தவராகவும் செயற்படுகின்றார். leo மற்றும் lion இனுடைய அங்கத்தவராகவும் இoroatia நாட்டினுடைய தூதுவராகவும் செயற்படுகின்றார்.

kapppom organization இல் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பாளராகவும் க்குஅ செயற்திட்ட அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பாளராகவும் செயற்படுகின்றார். ayevac அதாவது alliance of youth to end violence against children அமைப்பினுடைய அம்பாறை மாவட்ட தலைவாராகவும் செயற்படுகின்றார். கை கொடுக்கும் கரங்களினுடைய அங்கத்தவராக செயற்படுகின்றார். peace and community action இனுடைய நிந்தவூர் உறுப்பினராக காணப்படுகின்றார். eclat unites இனுடைய உறுப்பினராக காணப்படுகின்றார்.

மேலும் நிகழ்வுகளின் வளவாளராகவும் செயற்படுகின்றார். bay organization இல் volunteer ஆக பணியாற்றுகின்றார். Youth democracy alliance இல் உறுப்பினராக செயற்படுகின்றார். women empowerment association இல் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டு வருகின்றார். Global youths biodiversity network இல் volunteer ஆகவும் இருக்கின்றார். அம்பாறை மாவட்ட youth fedaration இல் உறுப்பினராக செயற்படுகின்றார். International youth alliance for peace இனுடைய global volunteer ஆக செயற்படுகின்றார். ESDF இன் youth peace advocates செயற்திட்ட அங்கத்தவராக காணப்படுகின்றார். Smart Teach Academy இல் ஆசிரியராகவும் நிறுவனராகவும் காணப்படுகின்றார். Sunfo global federation இல் அங்கத்தவராக இருக்கின்றார். Zero plastic அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பாளராக செயற்படுகின்றார். CP arts கலா மன்றத்தினுடைய அங்கத்தவராகவும்



காணப்படுகின்றார். Srilanka unites இல் volunteer ஆகவும் உறுப்பினராகவும் பணி புரிகின்றார். Top and hit maas production இல் அங்கத்தவராகவும் செயற்படுகின்றார். Pond social service இனுடைய அங்கத்தவராகவும் செயற்படுகின்றார். Islam is my religion எனும் இஸ்லாமிய பதிவுகளை இடும் குழுவின் தலைவராகவும் செயற்படுகின்றார். NAFSO அமைப்பின் அங்கத்தவராகவும் செயற்படுகின்றார். Rotaract and rotary club அங்கத்தவராக காணப்படுகின்றார். United mission trust இனுடைய உறுப்பினராக காணப்படுகின்றார். Create pool இனுடைய அங்கத்தவராகவும் காணப்படுகின்றார். இந்தியாவிலுள்ள இலக்கிய குழுமப் பொறுப்புக்களிலும் காணப்படுகின்றார். உளவியல் ஆலோசகராகவும் youth leadership வளவாளராகவும் பணிபுரிகின்றார். இவரது பிரதேசத்தில் சமூக சேவையாற்றி வருகின்றமையும் பின் தங்கிய குடும்பத்தை சேர்ந்தவரது தேவைகளை அறிந்து உதவிகளை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் இவர் CIML இனாலும் பல்கலைகழகங்கள் இணைந்து நடாத்திய mojo traning இல் செயற்பட்டுள்ளார். youth advocacy network srilanka இனுடைய sexual and reproducting சம்மந்தமான நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளார். SLPIஇனால் நடாத்தப்பட்ட ஊடகவியலாளருக்கான நிகழ்வில் இளம் ஊடகவியலாளராக கலந்து கொண்டுள்ளார். yes hub இனால் நடாத்தப்பட்ட environment innovation சம்பந்தமான நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார். amazon கல்லூரியின் ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார். beruwala news alert இல் அம்பாறை மாவட்டகுறிப்பிடத்தக்கதாக பணிபுரிந்தார். Minnal radio fm இல் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் இருந்துள்ளார்.

இவரது திறமைகள் ஒரு குறித்த வட்டத்தில் முடங்கிப் போகாமல் photography துறையிலும் art மற்றும் craft painting இலும் வெளிக்காட்டப்படுகின்றன. மேலும் இவரது பகுதிநேர செயற்பாடாக தோட்டம் செய்தல் மற்றும் இசைக்கருவிகளை வாசிப்பதாகும். இவர் பெற்றுக் கொண்ட வெற்றிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். அண்மையில் International achivers foundation இனால் women achivers award இற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். LACSDO media இன் திறமைக்கான விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தியாவினுடைய production for legal human rights foundation CÚõÀ women's day இனை முன்னிட்டு sprit of humanity award கிடைக்கப் பெற்றது என்பது முக்கிய அம்சமாகும். pen club national conference இல் விருது கிடைக்கப் பெற்றது. eastern youths organization இன் 4 ஆவது ஆண்டுவிழாவினை முன்னிட்டு விருது கிடைக்கப் பெற்றது. மேலும் அண்மையில் இவரது டிப்ளோமா படிப்பினை நிறைவு செய்து பட்டமளிப்பு விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

இவர் சவால்கள் வெற்றிக்கான படியாகவே கருதுகின்றார். இவரை சுற்றி பல விமர்சனங்களும் தவறான கதைகளும் வந்த போதிலும் இவர் நம்பிக்கையினை இழக்கவில்லை. இவருக்கு மனதில் இருந்த விடயம் நான் இன்னும் சாதித்து சிகரம் தொட வேண்டுமென்



பதே இவரது அவாவாக இருந்தது. இதற்கு இவரின் தாய் தந்தைக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றார் என இவ்வேளையில் கூறிக்கொள்கிறார். அவர்களின் ஊக்கமும் முயற்சியுமே இவர் வெற்றி பெற காரணமாக இருந்தது. அது மட்டுமல்லாது இவரது சகோதர சகோதரிகளின் ஒத்துழைப்பு, இவரது நண்பர்களின் ஒத்துழைப்பு ஆறுதலான வார்த்தைகள் மற்றும் குடும்பத்தினுடைய ஒத்துழைப்பு இவை அனைத்துமே இவர் உச்சம் தொட காரணமாக இருந்தது எனக் குறிப்பிடுகின்றார்.

இவரது குடும்ப பின்னணியினை பொறுத்தவரைக்கும் முன்மாதிரியான படித்தவர்கள், சிறந்த குடும்ப கட்டமைப்பு, சிறந்த வழிகாட்டல், சிறந்த அறிவுரை என அவர்களது வழிகாட்டல்கள் காணப்பட்டது. அவர்களின் முன்மாதிரியே இவரை சமூகத்தில் முன்மாதிரியாக மிளிர வைத்தது என்பதைக் குறிப்பிடுகின்றார். இவரின் எதிர்கால இலட்சியம் ஒரு சட்டத்தரணியாக வர வேண்டும் என்பதேயாகும். சமூகத்தில் ஒரு முன்மாதிரியான சமூக ஆர்வலராகவும் வர வேண்டும் என்பதோடு அரசியலிலும் நுழைந்து கொள்ளும் ஆர்வமும் இருப்பதாக குறிப்பிடுகின்றார்.

Face book & Binth nazeer
Instagram & iammisspretty

## சமூகத்துக்கு கூற எத்தனிக்கும் கருத்துக்கள்

★சமூகத்தில் பெண்களும் ஆண்களுக்கு நிகராக சாதிக்க வேண்டும்.

★ பெண்களும் தலைமைத்துவத்திற்கு வர வேண்டும். அந்தவகையில் சவால்கள், பிரச்சினைகள் எமக்கு




வரும் நாமும் சலைத்து விடாமல் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும். பிரச்சினை இல்லையென்றால் வாழ்க்கை சுவாரஷ்யம் இல்லாமல் போய் சமநிலையற்று போய் விடும்.

★ எமக்கு வரும் விமர்சனங்களே எம்மை ஒரு படி உயர்த்தும் என்ற நம்பிக்கையுடன் வாழ்கையின் அடுத்த படி எடுத்து செல்ல வேண்டும்.

★ இளம் வயதிலே பல துறைசார் சாதனைகளை தன் வசப்படுத்திக் கொண்ட நுஷைபா நஷீர் அவர்களின் எதிர்கால இலட்சியங்கள் நிறைவேற வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு வாழ்த்துகிறோம்.




MALAYSIAN
UNIVERSAL COLLEGE
BECOME AN INTERNATIONAL
QUALIFIED OBTAIN
AN UK, USA QUALIFICATION
FROM MUC
Level 4 & 5 Advance Diploma
Diploma level
Level 5 HND
Degree
UGC recognized
Migration purposes
2023-2024
ADMISSION
OPEN
Contact : 0770 857 994


MALAYSIAN
UNIVERSAL COLLEGE
BECOME AN INTERNATIONAL
QUALIFIED OBTAIN
AN UK, USA QUALIFICATION
FROM MUC
HND in Teacher Training
HND in bridal & makeup
HND in mehandhi ART
HND in early childhood Education
HND in cake and decorating
HND in baking
HND in psychology
All country attestation is done for work permit and migration purposes
100% we guarantee ur job in any country
We give the international syllabus with theory and practical methodology in your comfortable language
2023-2024
ADMISSION
OPEN
Contact : 0770 857 994

# வரலாற்றில் இஸ்ரேலின் இருப்பிடச் சிக்கல்? யூத தேசம் எங்கெல்லாம் உருவாக இருந்தன?

**(இரண்டாம் போரின் முன்னர் ஐரோப்பாவில் குடிபுகுந்த யூதர்களைக் எப்படி அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது என்பதில் ஒவ்வொரு நாடும் பெரும் ஆலோசனைகளில் ஈடுபட்டனர். வேறிடங்களில் குடியேற்றுவது பற்றி புதிய பல திட்டங்களை வகுத்தனர். அதனைப்பற்றி ஆராயும் வரலாற்றுப் பார்வையே இந்த அலசலாகும்)**

ஐரோப்பாவில் யூதர்களைக் கண்டு வெறுப்படைந்த காலம் ஒன்று இருந்தது. குறிப்பாக முதலாம் - இரண்டாம் உலகப் போருக்கு முன்பாகவே இத்தகைய வெறுப்பு யூத மக்கள் மீது இருந்து என பல வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பாவில் குடிபுகுந்த யூதர்களைக் எப்படி அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது என்பதில் ஒவ்வொரு நாடும் பெரும் ஆலோசனைகளில் ஈடுபட்டனர். வேறிடங்களில் குடியேற்றுவது பற்றி புதிய பல திட்டங்களை வகுத்தனர். அதனைப்பற்றி ஆராயும் வரலாற்றுப் பார்வையே இந்த ஆக்கமாகும்.




## யூதர்களை பூங்கொத்து கொடுத்து வரவேற்ற பாலஸ்தீனர்!

ஐரோப்பாவில் இருந்து வெளியேற்றப்பட்ட யூதர்களை, பாலஸ்தீனியர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்கள். அங்கு பாலஸ்தீனம் சென்று கால்பதித்து மெல்ல மெல்ல அவர்களின் நிலங்களை அபகரித்து இன்றைக்கு பாலஸ்தீனர்கள் 10%த்திற்கு குறைவான நிலத்தில் வசித்து தங்களின் தாய்நாட்டை இழந்து நிற்கதியாய் இருக்கிறார்கள் என்பது காலக் கொடுமையாகும்.




அப்படி பாலஸ்தீனத்தில் யூத மக்கள் வந்திருக்காவிட்டால், வேறு என்ன திட்டங்கள் எல்லாம் இந்த உலக நாடுகள் அவர்களுக்காக வைத்திருந்தார்கள் என்பதைப் பற்றி ஆராயும் வரலாற்றுப் பார்வையே அலசலே இந்த ஆக்கம்.

## இஸ்ரேலின் இருப்பிடச் சிக்கல் :

பாலஸ்தீனம் என்னும் தேசம் சரித்திர நியாயங்களின் அடிப்படையிலும், அம்மண்ணின் பூர்வீகக் குடிகள் என்கின்ற முறையிலும் பார்த்தால், கண்டிப்பாக அது பாலஸ்தீன அராபியர்களுக்கு உரியதுதான் என கூறினாலும், யூதர்களும் அந்த மண்ணின் பூர்வீகக் குடிகள் தான்.

யூதர்களும் அந்த மண்ணில் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்பே வந்தேறிகளாக வாழ வந்தவர்கள் தான். அராபிய இனம் மத்திய கிழக்கு நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகளான சிரியா, ஜோர்டான்,லெபனான், ஈராக், எகிப்து, ஈரான், சவுதி அரேபியா முழுக்க பரவி இருந்த இனம். அந்த இனம் பாலஸ்தீனிலும் பரவி இருந்தது.

அதனால் பாலஸ்தீன அராபியர்கள், அல்லது பாலஸ்தீன முஸ்லீம்கள் என்று அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் ஒரு காலத்திலும் பாலஸ்தீனை விட்டு வெளியேறியதில்லை.

1948ல் அவர்கள் தேசத்திற்குள், அவர்கள் அனுமதியின்றி ஐ.நா மற்றும் அமெரிக்கா, பிரிட்டன் துணையுடன் இஸ்ரேல் என்னும் தேசம் உருவானதாலும், அதனை முன்னிட்டு நடந்த போர்களினாலும் அகதிகளாக்கப்பட்டு சமீபத்தில் முழுமையாக நாடற்றவர்களாக வெளியேற்றப்பட்ட இனமாகி உள்ளனர்.

## அமெரிக்காவின் யூத நாடு திட்டம்:

யூதர்களுக்கு ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என 1825-ல் அமெரிக்காவின் நியூ யார்க்கில் உள்ள அரசியல்வாதியும் கதாசிரியருமான மோர்டியாக் மேனுவேல் நோஹ் 27 சதுர மைல் பரப்பளவு கொண்ட ஒரு தீவை வாங்கினார். எறாரத் (ARARAT& city of Refuge) என அந்தத் தீவிற்கு பெயர்சூட்டினார்.

இதனை அவர் யூதர்களுக்கான தாய்நாடாக மாற்றத் திட்டமிட்டார்.

அந்தத் தீவில் ஒரு பெரும் கல்வெட்டையும் நிறுவினார். அமெரிக்கா சுதந்திரம் பெற்ற 50வது ஆண்டில் இதை ஒரு சாதனையாக அறிவிக்க அவர் முனைந்தார். ஆனால் இந்த யோசனையை யாரும் செவிமடுக்கவில்லை என்பதால் அவர் திட்டத்தைக் கைவிட்டார். ஆனால் அவர் நிறுவிய கல்வெட்டு இன்றைக்கும் அங்கே உள்ளது.

## உகாண்டாவில் யூத நாடு:

பிரித்தானிய எழுத்தாளர் ஜோசப் சாம்பேர்லென் (Joseph Chamberlain)அவர்களின் காணியாகத் திகழ்ந்த கிழக்கு ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியை யூதர்களுக்கான தாயகமாக மாற்றத் திட்டமிட்டார். இந்தத் திட்டத்தை அவர் 1903-ல் பேசலில் நடைபெற்ற ஆறாவது சர்வதேச யூதர்கள் மாநாட்டில் அறிவித்தார்.

ஐரோப்பா முழுவதும் யூதர்களுக்கு எதிராக பெருகி வரும் எதிர்ப்பலைகளை சுட்டிக்காட்டி இதிலிருந்து தப்பிக்க விரைவில் ஒரு பாதுகாப்பான இடத்தை நாம் தேர்வு செய்தாக வேண்டும் என அவர் வற்புறுத்தினார். இதனை தியோடர் ஹெர்சலே ஒரு தற்காலிகத் தீர்வாக ஒப்புக்கொண்டார். பிரிட்டன் உகாண்டாவில் 5000 சதுர கிலோ மீட்டர் நிலத்தை ஒதுக்கவும் ஒப்புக் கொண்டது.

1904-ல் ஒரு பெரும் குழு இதனை ஆய்வு செய்ய அங்கே பயணித்தது. ஆனால் 1905-ல் ஆப்பிரிக்காவில் ஒரு யூத தாயகத்தை ஏற்படுத்துவது முதல் மாநாட்டின் தீர்மானங்களில் இல்லை என்பதால் இதனை ஏற்க இயலாது என பெரும் எதிர்ப்புகள் கிளம்பின.


THE PALESTINE POST
STATE OF ISRAEL IS BORN

## யூதர்கள் ரஷ்யாவுக்கு குடிபெயர்வு :

சிலுவைப்போரில் பின் அமைந்த இஸ்லாமிய பேரரசு அதாவது துருக்கியை தலைமையிடமாக கொண்டு எகிப்து ஈராக் சிரியா ஜோர்டான் லெபனான் ஆகியவற்றை உள்ளடக்கிய ஓட்டோமான் பேரரசு மீண்டும் யூதர்களை மீள் குடியேற்றம் செய்தது.

ஆயினும் அச்சத்தால், பெரும்பாலான யூதர்கள் ரஷ்யாவுக்கு குடிபெயர்ந்தார்கள். ரஷ்யாவுக்கு அதனுடைய அண்டை நாடு லிதுவேனியா எல்லை பிரச்னை இருந்தது. தங்களுக்கென தனி நாடு அமைக்கும் எண்ணத்தில் இருந்த யூதர்கள் அதன் எல்லைப்பகுதி நிலங்களை ரஷ்ய அதிகாரிகளிடம் லஞ்சம் கொடுத்து வாங்கி குவிக்கத் தொடங்கினர்.

அப்போது ரஷ்யப் பேரரசர் அலெக்சாண்டர் ஐஐ கொல்லப்படவே அது யூதர்களின் சதியாக இருக்கலாம் என்று சந்தேகப்பட்ட ரஷ்ய அதிகாரிகள் யூதர்களை நாட்டை விட்டு விரட்டினார்கள். 150 ஆண்டுகளுக்கு முன் ரஷ்யாவை விட்டு விரட்டப்பட்ட யூதர்களில் பலர் மீண்டும் துருக்கி பேரரசில் குடியேறினார்கள்.

போலந்து,லிதுவேனியா,இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளில் குடியேறியிருந்தார்கள். பெரும்பாலான யூதர்கள் ஜெர்மனியில் குடியேறியிருந்தார்கள். யூதர்களின் நிதி ஆளுமை நடவடிக்கை காரணமாக 50,000 யூதர்கள் லிதுவேனியாவில் கொல்லப்பட்டார்கள்.

## கிழக்கு ரஷ்யாவில் யூத தேசம் ?

யூதர்களின் எண்ணிக்கை படு வேகமாக வளர்ந்துவருவதை ரஷ்யா ஒரு நெருக்கடியாகப் பார்த்தது. அதனால் இதனைக் கட்டுப்படுத்த அவர்களுக்கு என்று ஒரு



தனித்த நிலப்பகுதியை ஏற்படுத்த அவர்கள் முடிவு செய்தனர்.

ரஷ்யா அங்கே சுயாட்சியுடன் கூடிய ஒரு சோசலிச வாழ்க்கையை அளிக்கலாம் என்றும், ஆனால் தேசிய அளவில் அவர்கள் ரஷ்யாவின் ஒரு பகுதியாகவே இருப்பார்கள் என்றும் அறிவித்தது.

கிழக்கு ரஷ்யாவில் சீனாவில் எல்லை அருகில் அவர்களுக்கு ஒரு நிலப்பரப்பையும் அவர்கள் இதற்காக ஒதுக்கினார்கள். இதுதான் பிரோபித்சான் (Birobidzhan) பகுதி ஆகும். கடும் குளிர் பிரதேசமாக இந்தப் பகுதி இருந்தது. அங்கே யூதர்கள் மெல்ல மெல்ல குடியேறினார்கள். ஒரு கட்டத்தில் அந்தப் பகுதியில் 16% பேர் யூதர்களாக வசித்தார்கள். ஆனால் தட்பவெப்பமும் காலமும் ஒத்துழைக்காததால் மெல்ல மெல்ல அங்கிருந்து பல ஊர்களுக்கு இடம்பெயர்ந்தார்கள்.

## யூதர்களை ஜப்பானில் குடியேற்றம்?

1934-ல் ஜப்பான் மன்னர் ஒரு திட்டத்தை அறிவித்தார். இதற்கு புகு திட்டம் (Fugu plan) என பெயர் சூட்டினார். யூதர்களை ஜப்பானில் குடியேற்றம் செய்தால் தன் வழியே ஜப்பானிற்கு பொருளாதார ரீதியில் பல நன்மைகள் ஏற்படும் என அவர் நம்பினார்.

6 லட்சம் பேரை குடியேற்றம் செய்யும் அளவிற்கு அவர்கள் பெரும் திட்டங்களை வகுத்தார்கள். ஆனால் யூதர்கள் ஆபத்தானவரக்ள் என்கிற பயம் ஜப்பானியர்கள் மத்தியில் கடுமையாக இருந்தது. யூதர்கள் அமெரிக்காவிற்கு ஆதரவாகவே நிற்பார்கள், அது ஜப்பானுக்கு ஆபத்தாகவே முடியும் என்று அரசியல் நிபுணர்கள் தெரிவிக்க இந்தத் திட்டத்தை கைவிட்டார்கள்.

## ஜெர்மனியில் பல லட்சம் யூதர்கள் கொலை :

முதல் உலகப்போருக்கு முன் நடந்த போர்களில் இங்கிலாந்து ஜெர்மன் ஆகிய நாடுகளில் யூத ராணுவப்பிரிவு இருந்தன. முதல் உலகப்போரில் இங்கிலாந்து ரஷ்யா பிரான்ஸ் ஒரு பக்கமும் ஜெர்மனி ஆஸ்திரியா இத்தாலி துருக்கி மறு பக்கமுமாக போரிட்டன.

ஜெர்மனியில் ஹிட்லர் ஆட்சியில் முதல் உலகப் போரின் தோல்விக்கு ஜெர்மனியர்கள் தான் என்றும், ஐரோப்பாவின் வறுமைக்கும் காரணம் யூதர்கள் தான் என்று யூதர்களை வேட்டையாடினார். கிட்டத்தட்ட அறுபது லட்சம் யூதர்கள் கொல்லபட்டனர்.

ஜெர்மனி தான் வென்ற நாடுகளான பெல்ஜியம், போலந்து, பிரான்ஸ் நார்வே ஸ்வீடன் ஆகிய நாடுகளில் உள்ள யூதர்களை தேடித்தேடி கொன்றது.

## ஜெர்மனி யூதரை மடகாஸ்கரில் குடியேற்ற முயற்சி :

1940 ஜுன் மாதம் ஜெர்மானியர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டினார்கள். அதாவது ஐரோப்பா முழுவதிலும் உள்ள யூதர்களை அங்கிருந்து அப்படியே வெளியேற்றி, அவர்



களை ஆப்பிரிக்கா அருகில் இருக்கும் மடகாஸ்கர் தீவில் குடியமற்றுவது என்பது தான் அந்தத் திட்டம்.

பிரான்ஸ் நாட்டை ஜெர்மனி கைப்பற்றிய நிலையில் பிரான்ஸ் வசம் இருந்த இந்தத் தீவை அப்படியே இந்தத் திட்டத்திற்கு பாவிப்பது என முடிவு செய்தார்கள். அடுத்து பிரிட்டனை வென்று, யூதர்களை ஐரோப்பாவில் இருந்து வெளியேற்ற பிரிட்டனிடம் உள்ள பெரிய கப்பல்களை பாவிப்பது என்றும் தீர்மானித்தார்கள்.

ஒரு வருடத்திற்கு பத்து லட்சம் யூதர்கள் என்கிற கணக்கில் நான்கு வருடங்களில் ஐரோப்பாவில் யூதர்களே இல்லாமல் பார்த்துக் கொள்வது என்பதும் அவர்களின் முழு இலக்காக இருந்தது. ஆனால் போரில் பிரிட்டனை ஜெர்மானியர்கள் வீழ்த்த முடியவில்லை என்பதால் இந்தத் திட்டத்தை கைவிட்டார்கள்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜெர்மனி தோற்றது. இங்கிலாந்து பாலஸ்தீனத்தில் கொஞ்சம் கொஞ்சமாக குடியேறியிருந்த யூதர்கள் பகுதியை பிரித்து இஸ்ரேல் என்ற தனிநாடாக அறிவித்தது.

## பூங்கொத்து கொடுத்தவர்க்கு குண்டுமழை பரிசா ?

இங்கிலாந்து தான் வென்றால் துருக்கியின் கட்டுபாட்டிலிருந்து எகிப்து சிரியா ஜோர்டான் லெபனான் இராக் ஆகியவற்றை விடுவிப்பதாகவும் இஸ்ரேலை மீண்டும் உருவாக்கி யூதர்களுக்கு தனிநாடாக அளிப்பதாகவும் அறிவித்தது. போரில் ஜெர்மனி தோற்றதால் துருக்கியிலிருந்து பல நாடுகள் சுதந்திர நாடுகளாக வெளியேறின.

இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் பாலஸ்தீனமும் சுதந்திரமடைந்தது. அப்போது இஸ்ரேல் தோன்றவில்லை. ஜெருசலேத்தை மட்டும் பிரிட்டன் தன் கையில் தக்க வைத்துக் கொண்டது.

ஐரோப்பாவில் இருந்து, இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் யூதர்களின் கப்பல் பாலஸ்தீன துறைமுகத்தை நெருங்கி போது அதில் இருந்தவர்கள் ஒரு பெரும் பதாகையை ஏந்தி வந்தார்கள் ''The Germans destroyed our families and homes & don't you destroy our hopes'' அதாவது ஜெர்மானியர்கள் எங்கள் குடும்பங்களை வீடுகளை அழித்துவிட்டார்கள், நீங்கள் எங்கள் நம்பிக்கையை அழித்துவிடாதீர்கள் என்றது அந்த பதாகை.

யூதர்கள் ஹிட்லரின் கொடுங்கோன்மையின் கீழ், ஹிட்லரின் ராணுவத்தின் பிடியில் சிக்கிச் சீரழிந்தது கண்டு உலகே கவலையுற்றது. ஹிட்லரைச் சாடியது, வரலாறு ஹிட்லரை ஒரு போதும் மன்னிக்காது.

யூதர்களை அங்கே சென்று இறக்கி விட்டு விட்டு மெல்ல இந்த விசயத்தில் தங்களின் கைகளை கழுவிக் கொண்டது இங்கிலாந்து. இனி இது எங்கள் பிரச்சனை இல்லை ஐநா பார்த்துக்கொள்ளட்டும் என விலகிக் கொண்டார்கள்.

தற்போது பூங்கொத்து கொடுத்த பாலஸ்தீன மனிதர்களுக்கு பாஸ்பரஸ் குண்டுகளைப் பரிசாகக் கொடுக்கும் வரலாறு ஒரு போதும் மன்னிக்காது.அப்படி ஒரு பதாகையை ஏந்தி வந்தவர்கள் இன்று பாலஸ்தீனர்களின் தாயகத்தை நிர்மூலமாக்கி வருகிறார்கள்.